Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

த பெனின்சுலா பார்மசி
THE PENINSULA PHARMACY
சகல விதமான மருந்து வகைகள், பால் மா வகைகள், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு அவசியமான பொருட்கள் என்பவற்றை நியாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
த பெனின்சுலா பார்மசி,
518, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
No.518, Hospital Road,
Jaffna.

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 30 | ஹிஜ்ரி 1428 ரம்ழான் 12 | (16.10.2005) | ஞாயிற்றுக்கிழமை | இதழ்:16

## ஆயுத பாணிகள் - படையினர் ஏறாவூரில் துப்பாக்கிச் சமர்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் - களுவன்கேணியில் நேற்று படையினருக்கும் இனந்தெரியாத ஆயுதபாணிகளுக்கும் இடையில் சிறிது நேரம் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது.

பொலிஸ் ஜீப் ஒன்று தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து இராணுவத்தினர் உதவிக்கு விரைந்து ஆயுதபாணிகள் மீது தாக்குதல் நடத்தினர். இதையடுத்து சுமார் 15 நிமிடங்கள் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது.

ஆயுததாரிகள் ஐந்து பேர் இந்தச் சண்டையில் பங்கேற்றதாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகரிக்கும் படுகொலைகள் கண்காணிப்புக்குழு கவலை!

கொழும்பு —


அண்மைக் காலமாக இலங்கையில் அதிகரித்துவரும் அரசியல் தொடர்பான கொலைகள் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் விலியா குட்மெனல் கருத்துத் தெரிவிக்கையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்த உடன்பாட்டை படையினர் சிதைக்கின்றனர்!

## கண்காணிப்புக்குழுவுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்



கிளிநொச்சி —


போர் நிறுத்த உடன்பாட்டை அரசபடையினர் சிதைத்து வருகின்றனர் என்பதை இலங்கை அரசுக்கு உணர்த்த கண்காணிப்புக் குழு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழீழ அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கோரியுள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட்டுக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று அனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

மட்டக்களப்பு - வவுணதீவில் கேணல் பானுவை இலக்குவைத்து கடந்த 10 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் வாகனத் தொடரணி மீது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் ஆயுதக்குழுவினர் நடத்திய தாக்குதல், மட்டக்களப்பு- மயிலவெட்டுவான் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் விடுதலைப்புலிகளின் தேசிய துணைப்படை வீரர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கர போர் வெடிக்கும் ஆபத்து!



## எச்சரிக்கிறார் புறூவ் ஹொவ்டே

கொழும்பு —

இலங்கையில் தற்போதுள்ள சூழ்நிலையில் மீண்டும் ஒரு பயங்கரமான போர் ஏற்படக்கூடிய ஆபத்து நிலவுகிறது. அரச படையினரும், புலிகளும் முழுமையான போருக்குத் தயாராகிவரும் அதேவேளை -

இந்தப் போரை ஏற்படுத்தும் மிக முக்கிய காரணியாக கருணா குழு இருந்து வருவதாக நோர்வே அரசின் விசேட தூதுவராக இலங்கை வந்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன்ட் புறூவ் ஹொவ்டே தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பிய யூனியன் விதித்த பயணத்தடை: அரசியல் வலுவற்றது; பக்கச்சார்பானது!

## உழவு இயந்திரம் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

பருத்தித்துறை —

சாரதிப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த இளை

# அரசியல் வலுவற்றது; பக்கச்சார்பானது!

## 'விடுதலைப் புலிகள்' ஏடு கண்டனம்

கிளிநொச்சி —

சிங்கள அரசின் நிழல் யுத்த முனைப்புக்கு நூற்றுக்கும் மேற்பட்ட புலிகள் இயக்கப் போராளிகள் பலியாகியுள்ள நிலையில் -

கதிர்காமர் கொலையின் பின்னணியில் - புலிகள் இயக்கத்திற்கெதிராக ஐரோப்பிய யூனியன் பயணத்தடை விதித்திருப்பது அரசியல் வலுவற்ற - பக்கச்சார்பான செயற்பாடாகுமென விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை கண்டனம் தெரிவித்துள்ளது.

நேற்று வெளியான புரட்டாதி - ஐப்பசி மாத விடுதலைப் புலிகள் ஏட்டின் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

. ஐரோப்பிய நாடுகளுக்கான புலிகள் இயக்கத்தின் அரசியல் பயணங்களைத் தற்காலிகமாக வரவேற்பதில்லையென 27.09.2005 அன்று ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது.

இந்த அறிப்பைக் கேள்வியுற்ற புலிகள் இயக்கம் மிகுந்த அதிர்ச்சியும் - ஆச்சரியமும் அடைந்துள்ளது. சமாதானப் பேச்சுக்கு எதிராக தமிழரின் சட்டபூர்வ அரசியல் அபிலாஷைகளுக்கு எதிராக சிங்கள தேசத்தின் பெரும்பாலான கட்சிகள் ஒன்றிணைந்து, இனவெறி அரசியலை முன்னெடுக்க - மக்கள் ஆணைகேட்க முற்படும் இன்றைய அரசியல் சூழலில், தமிழரின் போராட்ட சக்தியான

(11 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் உயிரிழப்பு!

பருத்தித்துறை —

சாரதிப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் பின்புறமாகச் செலுத்திய உழவு இயந்திரம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு குடத்தனை, பொற்பதி வீதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

இராமசாமி கருமைசாமி (வயது-50) என்ற மயிலிட்டியை சொந்த இடமாகவும், குடத்தனை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

மூன்று இளைஞர்கள் சாரதிப்பயிற்சி பெறுவதற்காக பின்புறமாக ஓட்டிப்பழகிய உழவு இயந்திரம் அவர்களின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தை நீடிக்க அரசு முடிவு!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலுடன் நேரடியாகத் தொடர்புபடும் பிரிவுகளை அகற்றிவிட்டு, அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

முன்னதாக இந்த மாதத்துடன் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கே அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

லண்டன் பயணமாவதற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடமும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜெயவர்த்தனவிடமும் நாட்

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்த தேசிய சங்க சபாவின் நேற்றைய கூட்டத்துக்கு இளம்பிக்குகள் ஊர்வலமாக வந்த காட்சி!

## கதிர்காமரை சுட்ட சினைப்பரே மாரவிலவில் கைப்பற்றப்பட்டது!

### அதிரடிப்படை கட்டளை அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு —

மாரவில - மகாவெவ பிரதேசத்தில் படையினரால் மீட்கப்பட்ட சினைப்பர் துப்பாக்கியே லக்ஷ்மன் கதிர்காமர் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாக விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த பிரதி பொலிஸ் மா அதிபர் நிமால் லெகே தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

மாரவிலவில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் நேற்றுமுன்தினம் விசேட அதிரடிப்படை நிபுணர்களால் சோதனையிடப்பட்டபோது இந்த ஆயுதம் சம்பந்தமாக பல முக்கிய தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

இது சீனாவில் தயாரிக்கப்பட்ட ரி-85 தன்னியக்க துப்பாக்கியாகும். வெடிச்சத்தம் வெளியே கேட்காதவாறு அதற்கு சைலன்சர் ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது. இந்த ஆயுதத்தில் பொருத்தப்பட்டிருந்த தொலைநோக்கி கருவி அமெரிக்கத் தயாரிப்பாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளைப் பிரம்பு தினம் யாழில் நேற்று அனுஷ்டிப்பு




யாழ்ப்பாணம்

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில் லயன்ஸ் கழகங்களால் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னதாக யாழ். நகர் கஸ்தூரியார் வீதியூடாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செவிப்புலன், விழிப்புலன் வலுவற்றோர் மற்றும் வலுவிழந்தோர் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தைக் குறிக்கும் பதாகைகளைத் தாங்கி ஊர்வலமாக யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியைச் சென்றடைந்து அங்கு நடைபெற்ற நிகழ்வில் பங்குபற்றினர்.

யாழ். விழிப்புலன் வலுவற்றோர், செவிப்புலன் வலுவற்றோர் சங்கத் தலைவர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மங்கள விளக்கை சங்கத் தலைவர் மகேந்திரன் மற்றும் யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில் லயன்ஸ் கழகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஏற்றிவைத்தனர். இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் வன்னியசிங்கமும் கலந்து கொண்டனர்.

யாழ். விழிப்புலன், செவிப்புலன் வலுவற்றோர் சங்க அங்கத்தவர்களின் நிகழ்ச்சிகள், லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளின் உரைகள் என்பவற்றுடன் மதிய போசனமும் வழங்கப்பட்டது.

# யாழ். மத்திய கல்லூரி அதிபரின் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம்



யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் கணபதி இராசதுரையின் பூதவுடல் நேற்று மாலை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

கடந்த புதன்கிழமை யாழ். நகரில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட அதிபரின் பூதவுடல் நேற்று பகல் 12 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

யாழ். மத்திய கல்லூரி பிரதி அதிபர் தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் பாலசுந்தரம்பிள்ளை, நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர், தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் பஞ்சலிங்கம், யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து மாணவர்களும், பொதுமக்களும் மலர் அஞ்சலி செலுத்தினார்கள், மாணவர்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், அதிபர்கள் புடைசூழ பூதவுடல் ஊர்வலமாக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு தகனம் செய்யப்பட்டது.

## மௌனகுரு சுவாமிகள் குருபூசை

சிவஸ்ரீ முருகுப்பிள்ளை (மௌனகுரு) கடவுள் சுவாமிகளின் இருபத்தைந்தாவது மகாசமாதி குரு பூசை இன்று மறவன்புலோவிலுள்ள சுவாமிகளின் சமாதி குரு பீடத்தில் நடைபெறும். விசேட பூசை, அபிஷேகம், பஜனை, பிரார்த்தனை, ஆத்மீகப் பேருரைகள் என்பவற்றைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு மூன்றாவது ஜனத்திரள் வாரமாக
ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி, நடித்த
மழை

காட்சிகள்:-11.00,3.00,7.00, (பழையநேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், லைலா
விவேக்
நாசர் நடித்த
தில்
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சூர்யா, அஸின்,
நயன்தாரா,
பிர காஸ்ராஜ்
நடித்த
கஜினி

ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (ப.நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்று மட்டும்
சரத்குமார்,
வைகைப்புயல்
வடிவேலு,
நமீதா நடித்த
சாணக்யா

காட்சிகள்:-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு!
பார்த்தீபன், லட்சுமிராய், வடிவேல் மற்றும் பலர் நடித்த
குண்டக்க மண்டக்க...
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

அருணலு

பெறுமதிமிக்க பரிசில்களை
5ஆம் ஆண்டு புலமைப்பரிசு பெறும்
செல்வங்களுக்கு வழங்குகிறது.

உங்களுடைய பிள்ளை புலமைப்பரீட்சையில் சித்தியெய்தி அதிகப்படியான புள்ளிகளை 1ம், 2ம் அல்லது 3ம் இடத்தில் அவருடைய பாடசாலையில் பெற்றிருப்பதுடன் பரீட்சை எழுதும் போது அவரது அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியாக இருந்திருந்தால், உங்களுக்கு எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நீங்கள் அருணலு கணக்கு வைத்திருக்கும் கொமர்ஷல் வங்கி கிளைக்கு பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சென்று பெறுமதிமிக்க பணப்பரிசுகளை தட்டிக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அருணலு கணக்கு திறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையவில்லையா?

கொமர்ஷல் வங்கியின் அருணலு - ஒளிமயமான எதிர்காலத்தை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

SSCB INTERNATIONAL

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

# புலிகளுடனான அதிகாரப் பகிர்வின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்!

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அதிகாரப் பகிர்வின் மூலம்தான் இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண முடியும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பேசுகையில் -

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான அதிகாரப்பகிர்வின் மூலமே தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

எதிரணியினர் கூறுவதுபோல, நாட்டைப் பிரிப்பதற்கல்ல, நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே முயற்சிக்கிறேன். போர் நிறுத்தம் மற்றும் சமாதானத்தின் மீதுள்ள நம்பிக்கை மக்கள் மத்தியில் இப்போது குறைந்து செல்கின்றது.

சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படாததனாலேயே இந்த நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவே நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறேன்.

சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு 2004ஆம் ஆண்டைவிட, இப்போது நல்ல சூழ்நிலை நிலவுகின்றது. உலகம் ஏற்றுக்கொண்ட தீர்வுக்கான ஒரு வரைபு உள்ளது. நாட்டை எந்தக் காரணத்துக்கும் கூறுபோட முடியாது. ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களின்போது கூட்டாட்சி முறையிலான ஒரு தீர்வுக்கு புலிகள் ஒப்புக்கொண்டனர். இதற்கு உதவி வழங்கும் நாடுகளும், சர்வதேச சமூகமும் ஆதரவளித்துள்ளன.

ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், இதன் அடிப்படையில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பேன். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்லாமல், ஜே.வி.பி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய கட்சிகளுடனும் இது குறித்து பேச்சுக்கள் நடத்தி, சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுவேன்.



ஐக்கிய இலங்கைக்குள் அனைத்துத் தரப்பினரதும் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையிலான ஒரு தீர்வை காண்பதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி பொதுமக்களின் ஒப்புதலும் பெறப்படும்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறாத மகிந்த ராஜபக்ஷவினால் அமைதி முயற்சிகளுக்குத் தீர்வுகாண முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் எனவும் கூறினார்.

# மேஜர் முத்தலிப் கொலை வழக்கு 5 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு—

புலனாய்வுத்துறை அதிகாரி மேஜர் முத்தலிப் கொலை வழக்கில் 5 பேரின் விளக்கமறியல் நவம்பர் 10 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்புத் தலைமை நீதிமன்றில் ஊடகவியலாளர் சஞ்சீவ உள்ளிட்ட 5 பேரும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்கள் 5 பேரும் பொறளை பகுதியில் முத்தலிப்பின் பயண நேரம் குறித்த தகவல்களைச் சேகரித்ததாகவும் சாட்சியங்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் நீதிமன்றில் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதையடுத்து 5 பேரின் விளக்கமறியலை நவம்பர் 10 ஆம் திகதி வரை நீடிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

# பொலிஸாரின் விளக்க மறியல் நீடிப்பு குழந்தைகள் பாதுகாப்புசபை விசனம்!

கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகள் மன்னாரில் வைத்து 3 பொலிஸாரைக் கைதுசெய்தது தொடர்பான பிரச்சினையில் சர்வதேச சமூகம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்று தேசிய குழந்தைகள் பாதுகாப்புச் சபை விசனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து இந்தச் சபையின் தலைவரான ஹிராந்தி விஜமான கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழீழ நிர்வாகப் பகுதியில் அனுமதியின்றி உள்நுழைந்ததாக மூன்று பொலிஸார் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோக வழக்கில் தொடர்புடைய நபரைக் கைதுசெய்யவே அந்த மூவரும் அந்தப் பகுதிக்குச் சென்றனர். அவர்கள் மூவரும் உளவாளிகள் அல்ல. தற்போது மூன்று பொலிஸாரும் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை தமிழீழ நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இதுதொடர்பாக சர்வதேச அமைப்புகளிடமும், நாடுகளிடமும் நாம் முறைப்பாடு செய்தோம். ஆனால் சர்வதேச சமூகத்தினர் இந்த விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை எனக் கூறியுள்ளார்.

# விமான நிலைய குண்டுப்புரளி வதந்தி; பெண் அதிகாரி கட்டாய விடுப்பில்!

கொழும்பு —

கட்டுநாயக்க விமான நிலையத்தில் குண்டுப் புரளி வதந்தியை ஏற்படுத்தியதில் தொடர்புடையதாகக் கருதப்படும் பெண் அதிகாரி ஒருவர் கட்டாய விடுப்பில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

பசிபிக் எயார்லைன்ஸ் விமானத்தில் குண்டு இருப்பதாக தொலைபேசித் தகவல் கிடைத்துள்ளது என்று கடந்த 9 ஆம் திகதி அந்தப் பெண் ஊழியர் வதந்தியைப் பரப்பினார்.

இதையடுத்து விமானநிலைய நிர்வாகத்தினர் தொடர்ச்சியான விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த விசாரணைகளின் முடிவில் செப்ரெம்பர் 9 ஆம் திகதி மற்றும் ஒக்ரோபர் 3 ஆம் திகதிகளில் சவூதி அரேபிய மற்றும் சிறிலங்கா எயார்லைன்ஸ் விமானங்களில் குண்டுப் புரளியை ஏற்படுத்தியதில் பெண் அதிகாரிக்கு தொடர்பிருப்பதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து அந்தப் பெண் அதிகாரியை கட்டாய விடுப்பில் செல்லுமாறு விசாரணைக் குழு பணித்துள்ளது.

# பிரிவினைவாதிகளை ஆதரிப்பவர்களே ஐ.தே.கட்சியுடன் இணைந்துள்ளனர்

## மகாகும்புக்வவே தேரர்

கொழும்பு—

ஐக்கிய இலங்கை என்ற கருத்தைக் கொண்டிருக்கும் ஐக்கிய தேசியகட்சியுடன் இன்று இணைந்திருப்பவர்கள், பிரிவினைவாதிகளை ஆதரிப்பவர்களாவர்.

இதனால், ஐக்கிய இலங்கைக்குள் யுத்தம் தொடர்வதற்கான வாய்ப்புகளே உள்ளதாக தேசிய சங்க சம்மேளனத்தின் இணைத்தலைவர் மகாகும்புக்வவே பியரத்னதேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில், தமது நிலைப்பாடு தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்காக நேற்று மேற்படி சம்மேளனத்தினர் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

ஜனாதிபதித் தேர்தலில் ஒற்றையாட்சி மற்றும் ஐக்கிய இலங்கை என்ற இரண்டு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே இதற்குள் முடிவு ஒன்றுக்கு வரவேண்டியது, பிக்குகளுக்கான கடப்பாடாகும்.

1815 ஆம் ஆண்டில் மலைநாட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதில் இருந்து 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி வரை இலங்கையில் ஒற்றையாட்சி நிலவியது. இதன்போது நாட்டில் யுத்தம் ஏற்படவில்லை.

ஆனால், தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் பிரிவினைவாதிகளை ஆதரிப்பவர்கள் இணைந்திருப்பதால் நாட்டில் மீண்டும் யுத்தம் தொடர வாய்ப்புள்ளது.

அண்மையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் - சிங்கள இராணுவம் தமது தாயகப் பிரதேசத்திலிருந்து வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்தார். இதிலிருந்து விடுதலைப் புலிகள் இன்னும் தமிழீழக் கோரிக்கையை கைவிடவில்லைஎன்பது தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னமும் சமஷ்டி முறையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# பாடசாலை மாணவர்களில் 10 வீதமானோர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர்

## யுனிசெவ் தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கையில் 13 வயதுக்கும், 15 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்களில் 10 வீதமானோர் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகியிருப்பதாக யுனிசெவ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் 40 ஆயிரம் பேரின் மத்தியில் எடுக்கப்பட்ட ஆய்வின்போது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி 13 வயதுக்கும், 15 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களில் 25 வீதமானோர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் எதுவும் அறிந்திருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. பாலியல் தொடர்பான போதிய அறிவு இல்லாமையே இதற்கான காரணம் என யுனிசெவ் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அறிக்கையின்படி, 15 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களில் 14 வீதமானவர்கள் பல்வேறு நிலையில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகுகின்றனர்.

இவர்களில் 65 வீதமானோர் குடும்ப உறவினர்களாலேயே பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த யுனிசெப்பின் அறிக்கை, இவர்களில் அதிகமானோர் ஆண் பிள்ளைகள் என்றும் தெரிவித்துள்ளது. (01)

# பஸ் விபத்தில் இருவர் பலி;

கொழும்பு—

கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று பம்பரகல பகுதியில் பள்ளம் ஒன்றில் விழுந்ததில் 2 பேர் உயிரிழந்ததுடன், 41பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4.45 மணியளவில் சுமார் 300 அடி பள்ளத்தில் இந்த பஸ் வீழ்ந்தது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (01)

# மாத்தளையில் கைதானோருக்கு பிணை வழங்குவதற்கு மறுப்பு

கொழும்பு—

தேர்தல் சட்டங்களை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஆறுபேருக்கு பிணை வழங்க மாத்தளை நீதிமன்றம் மறுத்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி வெலிகம பிரதேசத்தில் வைத்து தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது, பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மாத்தளை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர்கள் சார்பில், 18 சட்டத்தரணிகள் ஆஜராகினர். சட்டத்தரணிகள் சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

எனினும், பிணை மனுவை ஆராய்ந்த மாத்தளை நீதிவான் ரொஹான் ஜயவர்த்தன சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்ய மறுத்துள்ளார்.

பெருந்தோட்டத்துறை அமைச்சுக்குச் சொந்தமான வாகனம் ஒன்றில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தபோதே இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(01)

# பள்ளிவாசல்களில் 5 வேளை தொழுகைக்கும் ஒலிபெருக்கிகள் பாவிப்பதை தடுக்கவும்!

## ஜனாதிபதி ஆணைக்குழு சிபார்சு

கொழும்பு—

முஸ்லிம் மக்களின் பள்ளிவாசல்களில் இருந்து 5 வேளைத் தொழுகைகளின் போது எழுப்பப்படும் பாங்கு ஓசையை, ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்புவதற்கு தடைவிதிக்க வேண்டுமென பௌத்த சாசனம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பௌத்த சாசனத்தைப் பேணுவது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவே தனது சிபார்சுகளை தெரிவித்திருப்பதாகவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.


மத நடவடிக்கைகளுக்கு ஒலிபெருக்கிகளை பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடு தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்கும் சிபார்சில், குறிப்பாக முஸ்லிம் பள்ளிவாசல்களில் ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்தி ஒரு நாளைக்கு 5 தடவைகள் மதத் துதி ஒலிபரப்பப்படுகிறது.

இது அதனை அண்டிய பகுதிகளில் வசிப்போருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதோடு, இத்தகைய ஒலி பெருக்கிகளினால் சூழலும் மாசுபடுகிறது.

விசேட மத நிகழ்வுகளைத் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் சுற்றாடல் குடியிருப்பாளர்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக ஒலி பெருக்களின் பாவனையைத் தடுக்குமாறு, சிபார்சு செய்ததாகவும், இந்த நடவடிக்கை மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவும் எனவும் ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இது குறித்து முக்கிய கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போதும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தற்காலிகமாக இந்த செயற்பாடு ஒத்திவைக்கப்பட்டுள் ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.


எனினும் சம்பந்தப்பட்ட தரப்புகள் இதனை உறுதிப்படுத்தவில்லை. (01)




# 190 ஓட்டங்களுக்குள் உலக லெவனை மண் கவ்வச் செய்தது அவுஸ்ரேலியா!



JOHNNIE WALKER SUPER SERIES AUSTRALIA 2005



விளையாட்டு



சிட்னி —

சுப்பர் சீரிஸ் டெஸ்ட் போட்டியில் - உலக லெவன் அணியை 190 ஓட்டங்களுக்குள் அவுஸ்ரேலிய அணி சுருட்டியது.

நேற்றுமுன்தினம் சிட்னியில் ஆரம்பமான சுப்பர் சீரிஸ் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி முதல்நாள் ஆட்டத்தில் 6 விக்கெட் இழப்புக்கு 331 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று ஆட்டம் தொடங்கியபோது, 94 ஓட்டங்களுடன் இருந்த கில்கிறிஸ்டும், 1 ஓட்டத்துடன் இருந்த வோனும் களமிறங்கினர்.

ஆட்டம் தொடங்கியதுமே பிளின்ரொப்பின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் கில்கிறிஸ்ட் ஆட்டமிழந்தார். இவர் 117 பந்துகளில் 8 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 94 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து வோனுடன் லீ இணைந்தார். ஆனால், ஸ்கோர் 339 ஆக இருந்தபோது, வோனும் ஆட்டமிழந்தார். 5 ஓட்டங்களுடன் இருந்த இவர், பிளின்ரொப்பின் பந்துவீச்சில் கலிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து மக்ரா களமிறங்கினார். அதற்கிடையில் பிளின்ரொப்பின் பந்துவீச்சில் சிமித்திடம் பிடிகொடுத்து லீ ஆட்டமிழந்து வெளியேற நேரிட்டது.

அடுத்து மக்கில் களமிறங்க - மக்ரா ரன் அவுட்டாகி பவிலியன் திரும்ப அவுஸ்ரேலிய அணி 345 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

25 உதிரி ஓட்டங்களைக் கொடுத்த உலக அணி பந்துவீச்சாளர்களில் - பிளின்ரொப் 4, முரளிதரன் 2, ஹர்மிசன் 1, விற்றோரி 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அடுத்து பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் உலக லெவன் அணி களமிறங்கியது. சிமித்தும் ஷேவாக்கும் தொடக்க வீரர்களாகக் இணைந்தனர்.

இவர்கள் இருவரும் நிதானமாக ஓட்டங்களை எடுக்கத் தொடங்கியபோதும் - ஸ்கோர் 27ஆக இருந்தபோது- முதல் விக்கெட்டை வீழ்த்தினார் லீ. லீயின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த சிமித் 25 பந்துகளில் 1 பவுண்டரியுடன் 12 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து ஷேவாக்குடன் இணைந்த ராவிட் 6 பந்துகளை எதிர்கொண்டு ஒரு ஓட்டமும் பெறாத நிலையில் மக்ராவின் பந்தை கில் கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ராவிட் ஆட்டமிழந்தபோது, ஸ்கோர் 31ஆக இருந்தது.

அடுத்துவந்த லாறாவும் நீண்டநேரம் நிலைத்து நிற்கவில்லை. ஸ்கோர் 43ஆக இருந்தபோது -1பவுண்டரியுடன் 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மக்ராவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இவரையடுத்து கலிஸ் களமிறங்கினார்.

ஷேவாக்கும் இவரும் நிதானமாக ஓட்டங்களைக் குவித்ததால், உலக லெவன் அணி மிக மோசமான பின்னடைவிலிருந்து தப்பியது.

ஸ்கோர் 134ஐ எட்டும்வரை நிதானமாக ஆடிய ஷேவாக்கை வோன் வீழ்த்தினார். 82 பந்துகளில் 14 பவுண்டரிகளுடன் 76 ஓட்டங்களை இவர் எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து இன்சமாம் களமிறங்கினார். ஆனால், ஒரே ஒரு ஓட்டத்துடன் வந்த வேகத்திலேயே இவரும் பவிலியன் திரும்பினார். மக்கிலின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டால் ஸ்ரம்பிங் செய்யப்பட்டு இவர் ஆட்டமிழந்தார்.

அடுத்து கலிஸுடன் பிளின்ரொப் இணைந்தார். ஆயினும் ஸ்கோர் 147ஐ எட்டியபோது - கலிஸ் வீழ்த்தப்பட்டார். வோனின் பந்துவீச்சில் ஹைடனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர் 94 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 44 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து களமிறங்கிய விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர் ஓட்டமெதையும் எடுக்காமலே பவிலியன் திரும்பினார். இவரது விக்கெட்டையும் வோனே கைப்பற்றினார்.

இதையடுத்து விற்றோரி துடுப்பாட்டத்தில் இணைந்தார். பிளின்ரொப்புடன் இவர் இணைந்து ஆடிக்கொண்டிருந்தபோது, 8ஆவது விக்கெட் வீழ்த்தப்பட்டது.

ஸ்கோர் 183ஆக இருந்தபோது - மக்கிலின் பந்துவீச்சில் லீயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த பிளின்ரொப் - 36 பந்துகளில் 4 சிக்ஸர்களுடன் 35 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து ஹர்மிசன் 1 ஓட்டத்துடனும், முரளிதரன் 2 ஓட்டங்களுடனும் மக்கிலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

இதனால், 190 ஓட்டங்களுக்குள் உலக லெவன் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.


பந்துவீச்சில் மக்கில் 4, வோன் 3, மக்ரா 2, லீ 1 விக்கெட்டை வீழ்த்தினர்.


உலக லெவன் அணி ஆட்டமிழந்ததையடுத்து 155 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்த அவுஸ்ரேலிய அணி, இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

லாங்கரும், ஹைடனும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ஸ்கோர் 30ஆக இருந்தபோது லாங்கர் ஆட்டமிழந்தார். கலிஸின் பந்துவீச்சில் சிமித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர், 33 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 22 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து ஹைடனுடன் பொண்டிங் இணைந்தார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் அவுஸ்ரேலிய அணி 1 விக்கெட் இழப்புக்கு 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹைடன் 27, பொண்டிங் 17 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.









# உலக செஸ் சம்பியனானார் பல்கேரிய வீரர் டெபலோவ்!

சான்லூயிஸ் —



உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் பல்கேரிய வீரர் வெசெலின் டெபலோவ் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். இந்தியாவின் ஆனந்த் 2ஆவது இடத்தையே பிடித்தார்.

உலக செஸ் சம்பியன் போட்டி ஆஜென்ரீனாவில் உள்ள சான்லூயிஸ் நகரில் நடைபெற்றது.

இதன் 13ஆவது சுற்று ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் இந்தியாவின் கிராண்ட்மாஸ்டர் ஆனந்த், ரஷ்ய வீரர் அலெக்சாண்டர் மொரெவிச்சை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டம் 27ஆவது காய் நகர்த்தலுக்குப் பின்னர் சமனிலையில் முடிந்தது.

ருஸ்டம் காசிம்னோவ் (உஸ்பெகிஸ்தான்) - வெசெலின் டெபலோவ் (பல்கேரியா) மோதிய ஆட்டமும் சமனிலையில் முடிந்தது.

13ஆவது சுற்று முடிவில் பல்கேரிய வீரர் செவெலின் டெபலோவ் 9.5 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டம் வென்றார். ஆனந்த் (இந்தியா), பீற்றர் சிட்லெர் (ரஷ்யா) தலா 8 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளனர்.

14ஆவது மற்றும் கடைசிச் சுற்றுப்போட்டி நேற்று நடைபெற்றது. ஒரு சுற்று மீதமாக இருக்கையிலேயே செவெலின் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிவிட்டார்.



# கடினமாக உழைத்ததால்தான் இந்திய அணியில் இடம்பிடித்தேன்

## புதுமுக வீரர் ஸ்ரீசந்த் சொல்கிறார்

கொச்சி —

கடினமாக உழைத்ததால் அணியில் இடம்பிடித்திருப்பதாகவும் - இதனால்தான் தேர்வாளர்களால் அடையாளம் காணப்பட்டதாகவும் இந்திய அணியின் புதுமுக வீரர் சிறிசந்த் தெரிவித்தார்.

இம்மாத இறுதியில் இலங்கை கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணியில் புதுமுக வீரர் ஸ்ரீசந்த் இடம்பெற்றுள்ளார்.

சலஞ்சர் கிண்ணப் போட்டியில் இந்திய பி அணியில் ஸ்ரீசந்த் இடம்பெற்றிருந்தார். அவர் சிறப்பாக ஆடியதன் மூலம் இந்திய அணியில் இடம்பிடித்தார். இது தொடர்பாக ஸ்ரீசந்த் கூறியதாவது -

சலஞ்சர் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் டெண்டுல்கர், லக்ஸ்மன் ஆகியோரது விக்கெட்டுக்களை வீழ்த்தியது அணியில் இடம்பிடிக்க உதவியாக இருந்தது. இந்தத் தொடரில் விளையாடுவதற்கு முன்பு அணியில் இடம் கிடைக்குமென்று நினைக்கவில்லை. ஆனால், தொடர் நாயகன் விருதை வென்றதும் நம்பிக்கை ஏற்பட்டது.

பெங்களூர் பயிற்சி முகாமில் சப்பல் எனக்கு மிகவும் உதவினார். எனது அணியின் பயிற்சியாளர் றொபின்சிங், சலஞ்சர் போட்டியில் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றக் காரணமாக இருந்தார். இந்திய அணிக்காக எனது முழுப் பலத்தையும் பயன்படுத்தி சிறப்பாகப் பந்துவீசுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

22 வயதாகும் ஸ்ரீசந்த் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர். வலதுகை மிதவேப்பந்து வீச்சாளரான இவர், முதல்தர போட்டிகளில் 21 ஆட்டங்களில் விளையாடி 58 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். சிறப்பான பந்துவீச்சு 5/57 ஆகும்.

# தகுதி, திறமையை நிரூபித்துவிட்டு கங்கூலி அணிக்குத் திரும்பலாம்!

## இந்திய அணியின் பயிற்சியாளர் சப்பல்

மொஹாலி —



உடல்தகுதியையும், ஆட்டத் திறனையும் நிரூபித்துவிட்டு கங்கூலி அணிக்குத் திரும்பவேண்டுமென்று பயிற்சியாளர் சப்பல் கூறியுள்ளார்.

இலங்கையுடனான போட்டித் தொடருக்கு எதிரான இந்திய அணியின் தெரிவு குறித்து பயிற்சியாளர் கிரேக் சப்பல் மொஹாலியில் நிருபர்களிடம் கூறியதாவது -

ராவிட் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர். அவருடன் இணைந்து பணியாற்றுவதை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கிறேன். இலங்கை சுற்றுப் பயணத்தில் அவர் அணிக்கு தலைமை தாங்கிச் சிறப்பாகச் செயற்பட்டார். திறமையும், கிரிக்கெட் பற்றிய அறிவுக் கூர்மையும் அவருக்கு நன்றாக இருக்கிறது.

காயம் காரணமாக அணியில் சேர்க்கப்படாத கங்கூலி முதலில் தனது உடல் தகுதியை நிரூபிக்கவேண்டும். அடுத்து உள்ளூர் போட்டியில் ஆடி, ஆட்டத் திறனுக்கு வந்துவிட்டு அணியில் இடம்பிடிக்கவேண்டும். அதற்காக அவர் கடுமையாக உழைக்கவேண்டும்.

டெண்டுல்கர் அணிக்குத் திரும்பியிருப்பது சிறப்பானதாகும். அவர் கொஞ்சம் போட்டிகளில் ஆடினால் சரியாகிவிடும். அவர் 'ஸ்ட்ரோக்' ஆடும் விதம் நன்றாக உள்ளது. அவர் பயிற்சி முகாமில் நல்ல நிலையை எட்டுவாரென இந்திய அணியின் பயிற்சியாளர் சப்பல் தெரிவித்தார்.

இந்திய அணியின் கப்டனாக ராவிட் நியமிக்கப்பட்டிருப்பதை முன்னாள் கப்டன் கபில்தேவ் வரவேற்றுள்ளார். ராவிட் தலைமையில் அணி நல்ல முன்னேற்றம் பெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் ஜாகீர் அப்பாஸ், ராவிட்டின் நியமனத்தை பாராட்டியுள்ளார். அவர் முக்கிய துடுப்பாட்ட வீரர் மட்டுமன்றி, நல்ல கப்டனுமாவார். அவருக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. இந்திய கிரிக்கெட் சபையின் முடிவு சரியானதாகும். அதே நேரத்தில் ராவிட், கப்டன் பதவியில் தனது திறமையை நிரூபிக்க போதிய அவகாசம் கொடுக்கவேண்டுமென்றும் அவர் கூறியுள்ளாா.

# பதவிக்காலம் நீடிப்பு!

சிட்னி —



அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஜோன் புச்சானின் பதவிக்காலம் இந்த மாத இறுதியில் முடிவதாக இருந்தது. ஆஷஸ் தோல்வி காரணமாக அவர் நீக்கப்படுவார் என்று செய்திகள் வெளியாகின.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை, பயிற்சியாளர் ஜோன் புச்சானன் 2007 உலகக் கிண்ணப்போட்டி வரை பதவியில் நீடிப்பார் என்று அறிவித்துள்ளது. புச்சானன் 1999ஆம் ஆண்டில் ஜெப் மார்ஷுக்குப் பதிலாக பயிற்சியாளர் பதவிக்கு வந்தார்.

## சமுர்த்தி வங்கிகளில் சிறுவருக்கு கணக்கு

சுதுமலை —

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் உதவியுடன் மிகவும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களில் உள்ள - சிறுவர்களுக்கு சமுர்த்தி வங்கிகளில் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்மூலம் புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சேகரிக்கப்பட்ட நிதியைக் கொண்டே இந்த வறிய சிறுவர்களுக்கு சிசுரேக்கா கணக்குகள் ஆரம்பிக்ககப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் இவ்வாறு 28 சிறுவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. (44)

## சிறுவர் முதியோர் தினவிழா

சுதுமலை —

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் இளவாலைப் பிராந்திய இளையோருடன், அளவெட்டி இளைஞர், யுவதிகளும் இணைந்து நடத்தும் சிறுவர் மற்றும் முதியோர்தின நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு அளவெட்டி குருவளை பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - சமாதானக் குழுவினருடன், ஊக்குவிப்பாளர்கள் ஒன்றிணைந்து சிறுவரையும் முதியோரையும் கௌரவிப்பதுடன், கலைநிகழ்வும் இடம் பெறவுள்ளன.

சிறுவர்களுக்கான பரிசளிப்பு விழாவுடன் மாலை அணிவித்து, அன்பளிப்பு வழங்கி முதியோர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : சு.தீபிகா
முகவரி : வளலாய் அச்சுவேலி.

அகவை ஒன்று



பெயர் : ச.அபிசாந்
முகவரி : பண்டத்தரிப்பு

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :

பெற்றோர் ஒப்பம்


# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல்வேறு செயற்திட்டங்கள்

உடுவில் —

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சுன்னாகம் பொது நூலகம் மக்களிடையே வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி சிறுவர்கள் மற்றும் பொது மக்களை வரவழைத்து, நூலகப் பாவனையை அதிகரித்து இங்குள்ள பெறுமதிமிக்க கருத்துக்களைக் கொண்ட நூல்களை அவர்கள் வாசித்து பயன் அடைவதற்கேற்ற செயல்திட்டங்களை செயற்படுத்தவுள்ளது.

இந்த வாசிப்புமாதத்தில் பொதுமக்கள் தம்மிடமுள்ள அரிய பெறுமதிமிக்க புத்தகங்களை கடைகளில் பழைய கடதாசி விலைக்கு விற்பதை விடுத்து நூலகத்துக்கு அன்பளிப்பாகக் கொடுத்து உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பலரது அறிவு வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் ஒத்துழைக்க முடியும் என சுன்னாகம் பொது நூலக நூலகர் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 31ஆம்திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (101)

## யாழ்.பொது நூல் நிலையத்தில் ஆங்கிலக் கல்வி குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட மாணவர்களின் ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்ளும் நோக்குடன், சர்வதேச தோஸ் மாஸ்ரர் நிறுவனமும், ஹற்றன் நஷனல் வங்கியும் இணைந்து கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு இன்று காலை 11.00 மணி முதல் 2.30 மணிவரை யாழ். பொது நூல் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஆங்கிலக் கல்வியின் கல்வித் தரம் குறைந்து வருகிறது. இதனை கருத்தில் கொண்டு மாணவர்களுக்கு சிறந்த ஆங்கிலக் கல்வியை வழங்கும் நோக்குடன், சர்வதேச நிறுவனமான தோஸ் மாஸ்ரர் நிறுவனத்துடன் இணைந்து, வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி இந்த ஆங்கில வகுப்புக்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தக் கல்வி நிலை தொடர்பான விசேட கலந்துரையாடலும், விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இன்று 11.00 மணிமுதல் 2.00 மணிவரை கல்வியியலாளர்களுக்கும், மாலை ஆங்கிலக் கல்வியைப்பெற விரும்பும் ஆர்வலர்களுக்கும் நடைபெறும். இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை தெரிவிக்குமாறு வரையறுக்கப்பட்ட யாழ். ஹற்றன் நஷனல் வங்கி கேட்டுக் கொண்டுள்ளது.

## மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்துக்கு இரண்டு மாடிக்கட்டடம் அமைப்பு

உடுவில் —

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நீண்ட நாள் தேவையாக இருந்த கட்டடத்தை அமைப்பதற்கான வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மிகுந்த இடப் பற்றாக்குறையுடன் இயங்கி வந்த மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அலுவலகம், களஞ்சியம் என்பன அமைப்பதற்கு அண்மையில் வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்தால் புதிய இரண்டு மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (101)

## விவசாய வங்கி செயற்பாடுகள்

சுதுமலை —

கீரிமலை கமநல நிலையத்தில் அண்மையில் விவசாய வங்கிச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கீரிமலை கமநல சேவை நிலையத்தின் ஒரு பகுதியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலரால் விவசாய வங்கிச் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளதாகவும், இதனால் விவசாயிகள் தமது சேமிப்பு பழக்கத்தை அதிகரித்துக் கொள்ளவதுடன், கையில் கிடைக்கும்சிறு பணத்தொகைகளைகூட உடனடியாக வைப்பிலிடுவதுடன் மிக இலகுமுறையில் கடன்களைப் பெற்று நன்மையடைய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (44)

# கமநல கேந்திர நிலையம் அமைப்பதற்கு நிரந்தர காணியை தெரிவுசெய்ய கோரிக்கை

சுதுமலை —

சண்டிலிப்பாய் பிரதேசத்துக்கென அமைக்கப்படவிருக்கும் கமநல கேந்திர நிலையத்துக்கான சரியான ஓர் இடத்தைத் தெரிவு செய்யுமாறு கீரிமலை கமநல சேவை உதவி ஆணையாளரினால் - சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்துக்குட்பட்ட பகுதிகளுக்கென அமைக்கப்படவுள்ள கமநல கேந்திர நிலையத்துக்கான சரியான இடம் ஒன்று இதுவரை தெரிவு செய்யப்படவில்லை. இதனால் இந்தத் திட்டத்துக்கென ஒதுக்கீடு செய்யப்படவுள்ள 72 மில்லியன் ரூபா வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த விடயத்தில் தாங்கள் தலையீடு செய்து, இந்த நிலையத்தை அமைப்பதற்குச் சரியான இடத்தைத் தெரிவு செய்து, இந்த வருட இறுதிக்குள் அத்திவாரம் இட ஆவன செய்யுமாறு வேண்டுவதுடன், அடுத்த வருடம் அதாவது 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குள் இந்த வேலைகள் பூர்த்திசெய்யப்படவேண்டி இருப்பதனால், இது விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (44)

## சேவா லங்கா நிறுவனத்தால் நிரந்தர வீடுகள் அமைப்பு

சுதுமலை —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கொட்டடிப் பகுதி மக்களுக்கு, சேவா லங்கா நிறுவனம் பத்து நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

550 சதுர அடி அளவுடைய, வீட்டு மின் சுற்று வசதியுடன் அமைக்கப்பட்டு வரும் வீடுகள் ஒவ்வொன்றும் சுமார் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியானவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மிக வேகமாகக் கட்டடப் பணிகள் இடம் பெற்றுவருவதால், விரைவாகப் பயனாளிகளிடம் வீடுகளைக் கையளிக்க முடியுமெனவும் சேவா லங்கா நிறுவன த்தின் சுனாமித் திட்ட முகாமையாளர் க. உஜிதன் தெரிவித்தார். (91)

## யாழ். உணவகம் ஒன்றில் மதிய உணவுப் பார்சலில் புழு; உரிமையாளர் தண்டம் செலுத்தினார்

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரில் உள்ள உணவகம் ஒன்றில் சோற்றுப் பார்சலில் புழு இருந்ததாக நபரொருவர் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, மேற்படி கடை உரிமையாளருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்.நகரப்பகுதியில் இயங்கிவரும் உணவகம் ஒன்றில் மதிய உணவு உண்ணச் சென்ற போது, மேற்படி உணவில் புழு இருந்துள்ளது. இதனையடுத்து சம்பவம் தொடர்பாக சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கடை உரிமையாளருக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் சுகாதார பரிசோதகர்கள் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான், ரூபா 3 ஆயிரம் தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன், குறித்த சோற்றுப் பார்சலையும் பார்வையிட்டார்.

# சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர்,முதியோர் தினவிழா

சுதுமலை —

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் முதியோர், சிறுவர் தினவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக மனிதவள அபிவிருத்தி உதவி மாவட்ட செயலாளர் க.கனகரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கமும், திருகோணமலை மாகாண பொதுநிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி:க.சிவசிதம்பரமும், யாழ். மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும், டொக்டர் க.சிவனடியானும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்ச்சிகளாக முதியோர்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியுட்படப் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

அத்துடன் இந்த நிகழ்வில் மிகவும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட சிறார்கள் 28 பேருக்கு சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு வைப்புப் புத்தகங்கள் உரிய சிறார்களிடம் கையளிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (44)

## பிறப்பு இறப்புக்களைப் பதிவுசெய்ய பச்சிலைப் பள்ளியில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம் —

காலங்கடந்த பிறப்பு இறப்புக்களைப் பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தில் வடமாகாண உதவிப் பதிவாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ளது.

எனவே இதுவரை பிறப்பு இறப்புக்களைப் பதிவுசெய் யத் தவறியோர், இந்தச் சேவை யில் பங்குபற்றி பதிவுகளை மேற்கொள்ளுமாறும், இந்த நடமாடும் சேவையே இறுதிச் சந்தர்ப்பம் எனவும் உதவிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தெரிவித்தார்.








சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்.நகரில் ஆரம்பமாகிய யாழ். விழிப்புலனற்றோரின் பேரணி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி நோக்கிச் செல்வதையும், தொடர்ந்து அங்கு மங்கள விளக்கேற்றும் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். படங்கள்:- யூட்,அருள்.




# நல்ல மனம் வாழ்க


றொனால் டின்ஹோ தெய்வத்தை நம்பியவன்

பிறேசில் தேசிய அணியின் வீரர் றொனால் டின்ஹோ இன்று உலகின் அதிவிலை கூடிய உதைபந்தாட்ட வீரர். பார்சலோனா கழகத்தின் வீரரான இவர் தனது ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ள அவருக்கு வழங்கப்பட்டுள்ள தொகை 82 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ்.

இது ஒருபுறம். மறுபுறம் FIFAPRO 2004ம் ஆண்டின் முதன்மை உதைபந்தாட்ட வீரராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர் றொனால் டின்ஹோ . இந்த அமைப்பு நாற்பது நாடுகளின் பல்வேறு பண்பாடுகள், விழுமியங்கள், வாழ்க்கை முறைகள் போன்றவற்றைக் கொண்ட 38000 வாக்காளர்கள், அதுவும் உதைபந்தாட்ட தொழில்சார் விற்பன்னர்களும், உத்தியோகத்தர்களும் கொண்டது என்ற வகையில் அவர்களின் கருத்து வேறுபாடுகள் பாரிய இடைவெளியைக் கொண்டிருக்கும். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இறுதியில் றொனால் டின்ஹோவைத் தெரிவு செய்திருக்கிறார்கள். இந்த அமைப்பின் தெரிவென்ற வகையில் உலகின் முதலாவது விருதுபெற்றவர் என்ற பெருமையையும் பெற்றுக் கொள்கின்றார். 2004ம் ஆண்டின் FIFA இன் PLAYER OF THE YEAR விருது பெற்றவரும் றொனால் டின்ஹோவே. முன்னர் FIFA கடந்த நூற்றாண் டின் சிறந்த வீரர்களாக பீலே மற்றும் டியாகோ மரடோனாவைத் தெரிவு செய்திருந்ததும் தெரிந்ததே. இந்த நிலையில் இந்தப் பெருமை றொனால் டின்ஹோவைப் பொறுத்து லட்சத்தில் ஒருவர் என்ற விகிதாசாரத்தையும் நிரூபணப்படுத்துகின் றது.

டியாகோ மரடோனா முறைதவறிய கோல் ஒன்றை இங்கிலாந்துக்கு எதிராக (HAND BALL) உலகக் கிண்ணப் போட்டியின் போது போட்டு சர்ச்சைக்குள்ளாகியபோது, "இது கடவுளின் கிருபை" என்று புலம்பியிருந்தார். அந்த விடயம் மரடோனாவிற்கும் பெருத்த அவமானம் தரும் ஒன்றாகவே அமைந்தது. அதாவது (HIDDEN GODS HAND) இறைவனின் மறைமுகக் கரங்கள் தனக்கு உதவியதாக அந்த HAND BALL கோல் சம்பவத்தை மரடோனா நியாயப் படுத்தி இருந்தார். திடீரென்று மரடோனா - றொனால் டின்ஹோ விடயத்தில் நுழைந்தது எவ்வாறு என்று ஒரு கேள்வி பிறக்கின்றதல்லவா?


மரடோனா தெய்வத்தை மறந்தவன்

றொனால் டின்ஹோவின் அதீத திறமை அவர் செலுத்திய நம்பமுடியாத கோல்கள் சில இவருக்கும் இறைவனின் மறைமுக உதவி முறையாக இருப்பதாக உதைபந்தாட்ட உலகம் நம்புகிறது. அதற்கான காரணங்களையும் உதைபந்தாட்ட வீரர்களே ஏற்றுக் கொண்டு உதாரணங்களையும் காட்டுகிறார்கள்.

இந்த இறைவன் சர்ச்சையில் இரண்டு ஒப்பீடுகளைக் கூறிமுடிக்கலாம். டியாகோ மரடோனாவுடன் சமகாலத்தில் விளையாடியவர் ஜுர்கே வலடானோ. மரடோனா தன்னால்தான் அழிந்தபின் அவர் பற்றிய கருத்தைக்கூறிய வலடானோ இந்த அற்புதமான வீரர் பற்றி இப்படிக் கூறியிருந்தார். "அப்பாவி மரடோனா நீயே எங்களுக்குத் தெய்வம் என்றோம் நீயே எம்மைக் காக்கும் ரட்சகன் என்றோம். ஆனால் நீண்டகாலமாக அவருக்கு நாங்கள் ஒன்றைக்கூற மறந்து விட்டோம் அதுதான் எல்லாவற்றுக்கும் மேலாக நீ ஒரு மனிதன் என்பது" என்று கூறிமனவருத்தப்பட்டிருந்தார்.

றொனால் டின்ஹோ பொறுத்து தனது ஆற்றலை அதி உயர்வுக்குக் கொண்டு போனதை அவர் மனதாலும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இவர் பற்றி ஒரு உதைபந்தாட்ட வீரர் என்ன கூறுகிறார் பார்ப்போம். றொனால் டின்ஹோ அதி அற்புதமான வீரர். ஆனால் மைதானத்திற்கு வெளியே அவர் வெறும் சாமான்யன். ஏன் மைதானத்தில் கூட எங்களையெல்லாம் விட ஒருசில படிகள் நீ உயர்வானவன் தான் என்று அவருக்கு நாங்களே ஞாபகப்படுத்த வேண்டியிருக்கும்.

றொனால் டின்ஹோ விருது பெற்றது திறமைக்காக என்றால், அவரின் அதீத திறமைகள் எனவும் அவரை ஒரு மனிதன் என்ற நிலைக்கு அப்பால் கொண்டு சென்று விடாமல்தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்வதற்கு என்ன விருது கொடுக்கலாம்.

- ஜோசப்கிருஷ்ணா.

# அந்த ஆறு ஓவர்கள்


மைக்கலம் தவறிய சாதனை

கடந்த மாதம் சிம்பாப்வேயில், நியூசிலாந்துக்கும் சிம்பாப்வேக்கும் இடையில் நடைபெற்ற ஒருநாள் போட்டி ஒன்றில் நியூசிலாந்து 397 ஓட்டங்களை 44 ஓவர்களில் குவித்தது. 1996ஆம் ஆண்டு இலங்கை அணி கென்ய அணிக்கு எதிராக ஐந்து விக்கெட் இழப்பிற்கு, ஐம்பது ஓவர்களில் குவித்த 398 ஓட்டங்களே இது வரையில் சாதனையாக இருக்கிறது. நியூசிலாந்து இந்தச் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பை மயிரிழையில் இழந்திருக்கிறது.

இதற்கு முன்னதாக 1996/97இல் கென்யாவில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் சுற்றுப் பயணத்தின் போது பாகிஸ்தான் - இலங்கைக்கு எதிராக பாரிய ஓட்டக்குவிப்பொன்றைச் செய்திருந்தது. பாகிஸ்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஏழு விக்கெட் இழப்புக்கு ஐம்பது ஓவர்களில் 371 ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஆட்டத்தின் போது தான் சனத் ஜயசூரியவின் சாதனையொன்றும் முறியடிக்கப்பட்டது. சனத்ஜயசூரிய 45 பந்துகளில் சதம் அடித்த சாதனையை இந்த ஆட்டத்தில் 37 பந்துகளில் சதம் அடித்து சாஹிட் அப்ரிடி சாதனை படைத்தார். இந்தச் சாதனை இன்னமும் முறியடிக்கப்படவில்லை.

இன்னொரு சந்தர்ப்பத்தில் 1999இல் உலகக் கிண்ணப் போட்டிகளின் போது இந்திய அணி இலங்கைக்கு எதிராக ஆறுவிக்கெட் இழப்புக்கு ஐம்பது ஓவர்களில் 373 ஓட்டங்களைக் குவித்தது. கங்குலி 183 ஓட்டங்களும், டிராவிட் 145 ஓட்டங்களும் இவ்வாட்டத்தில் பெற்றார்கள். அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற NATWEST ஒருநாள் போட்டி ஒன்றில் பங்களாதேஸ"க்கு எதிராக இங்கிலாந்து 50 ஓவர்களில் நான்கு விக்கெட் இழப்புக்கு 391 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

1999/2000ஆம் ஆண்டில் இந்தியாவின் ஹைதராபாத் நகரில் நடைபெற்ற ஆட்டமொன்றில் நியூசிலாந்துக்கு எதிராக இந்தியா இரண்டு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து ஐம்பது ஓவர்களில் 376 ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஆட்டத்தில் சச்சின் ஆட்டமிழக்காமல் 186 ஓட்டங்களையும், டிராவிட் 153 ஓட்டங்களையும் குவித்தனர்.


அப்ரிடி நூற்றுக்கு நூறு

அதியுயர் ஓட்டங்கள் என்று பார்க்கும் போது கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளின் இறுதிப் போட்டியை மறந்துவிட முடியாது. இந்தியாவுக்கு எதிராக அவுஸ்ரேலியா ஐம்பது ஓவர்களில் இரண்டே இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 359 ஓட்டங்களைக் குவித்தது. இதுவே உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டமொன்றின் இறுதிப் போட்டியின் அதிகூடிய எண்ணிக்கை என்றும் கருதப்படுகின்றது. இவற்றைவிட 1992இல் பாகிஸ்தானுக்கு எதிராக இங்கிலாந்து குவித்த 363 ஓட்டங்கள் 1987/88இல் பாகிஸ்தானில் மேற்கிந்தியத்தீவுகள் 4விக்கெட் இழப்புக்கு ஐம்பது ஓவர்களில் குவித்த 360ஓட்டங்களும் குறிப்பிடத்தக்கது. இந்த ஆட்டத்தில் விவியன் றிச்சட்ஸ் 181 ஓட்டங் கள் பெற்றார்.

இப்படியாக 350 ஓட்டங்களுக்கு மேல் பெற்ற பல சந்தர்ப்பங்கள் இருந்தாலும், ஆரம்பத்தில் குறிப்பிட்ட சிம்பாப்வே நியூசிலாந்துக்கு இடையிலான போட்டியில் இரண்டு சாதனைகள் 2005இல் நிலை நாட்டப்பட்டிருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக இரண்டும் நடைபெறவில்லை. ஒன்று உலக சாதனையான 398 ஓட்டங்களுக்கு அப்பால் சென்று இலங்கையின் சாதனை முறியடிக்கப்பட்டிருக்கும். அடுத்தது 400 ஓட்டங்களுக்கு மேல் ஒரு நாள் போட்டியில் குவித்த முதல் அணி என்ற பெருமையை நியூசிலாந்து பெற்றிருக்கும். ஆனால் காலநிலை சாதகமாக இன்மையால் இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து எதிர்கொண்ட ஓவர்கள் நாற்பத்துநான்கு மட்டுமே. குறிப்பிட்ட 50 ஓவர்கள் நியூசிலாந்து துடுப்பெடுத்தாடி இருந்தால் மிகுதி 30 பந்துகளில் இன்னும் எத்தனை ஓட்டங்கள் இவர்கள் குவித்திருப்பார்கள்? ரசிகர்களின் ஊகத்துக்கே இதனை விட்டு விடலாம்.

- நிர்மலன்.

# தனிமைக்கு மரியாதை

ஷேன்வோன் முடிவடைந்த ஆஷஸ் தொடரில் 40 இலக்குகள் சரித்தவர். 249 ஓட்டங்களும் பெற்றவர். ஆஷஸ் தொடரை அவுஸ்ரேலியா இழந்தது உண்மையே என்றாலும், வோனைப் பொறுத்தவரை இங்கிலாந்து சுற்றுப்பயணம் அவருக்கு வெற்றியே . தற்போது தோற்றுப் போய் விடக் கூடாது தனது வாழ்க்கை என்று கூறும் வோன் மீண்டும் எனது மனைவியுடன் பேச விரும்புகிறேன், எனது பிள்ளைகள், மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன் என்றும் கூறுகிறார் அவர்.

இதனால் ஊடகவியலாளர்களிடம் விநயமானதொரு வேண்டுகோளை விடுக்கிறார் அவர். நான் எனது குடும்பத்தைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி எடுக்கும் இவ்வேளையில், எனது தனிப்பட்ட வாழ்வில் எனது குடும்பம் சார்ந்த விடயங்களில் உங்கள் தலையீட்டைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுள்ளார் அவர்.

நான் ஆஷஸ் தொடரில் கலந்து கொண்டபோது விளையாட்டில் முழுக் கவனத்தையும் செலுத்தினேன். அதனால் குடும்பம் பற்றிய வேதனை சற்றுக் குறைவாகவே இருந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல. எனது முழுச்சிந்தனையும் பிள்ளைகள் , மனைவி பற்றியே உள்ளது.

எனது இல்லற வாழ்வு குலைவதை நான் விரும்பவில்லை. இன்றும் கூட சிமோனுடன் கதைத்துக் கொண்டு தான் இருக்கிறேன். எமது கருத்துவேறுபாடுகளைக் களைந்து கொள்ள வேண்டியது இப்போது முக்கியமானது.


ஷேன்வோன்-சிமோன்
பிரிவு என்பதே உறவுக்காகத்தான்

அண்மையில் மீளவும் ஷேன்வோன் பற்றி வந்த செய்திகளை முற்றாக மறுக்கிறார் அவர். அவையெல்லாம் வெறும் குப்பைச் செய்திகள் என்று கூறியிருக்கிறார் அவர். மேலும் இதற்கெல்லாம் மறுப்பறிக்கை விட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படித் தொடங்கினால் அதுவே முழுநேர வேலையாகிவிடும். சின்னத்தனமாக நடந்து கொள்பவர்கள் பற்றி நான் கவலைப் படப்போவதில்லை. இப்போது என்னுடைய முதல் வேலை குடும்பத்துடன் இணைவது தான் என்கிறார்.

வோன் தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்வை முடித்துக் கொள்ளும் நாட்கள் நெருங்கிவிட்டதைச் சுட்டிக் காட்டுகிறார். நீண்ட தூரப் பயணங்கள் களைப்பை ஏற்படுத்துவதாகக் கூறுகிறார் அவர்.

இதேவேளை றிக்கி பொண்டிங் - வோனுக்கு டெஸ்ட் வாழ்க்கை இன்னமும் இருக்கிறது என்று அடித்துக் கூறுகிறார். தற்போதைக்கு அவர் எதிர்காலத்தில் தொடர்ந்தும் விளையாடுவாரா இல்லையா என்ற கேள்வியே எழவில்லை. அவரது முடிவு எப்படி இருக்குமோ தெரியவில்லை என்று கூறும் பொண்டிங், மற்றெந்த வகையிலும் அவருக்கு எதுவித சவாலும்இல்லை என்கிறார்.வோன் மீண்டும் வாழ்க்கையின் முக்கியமான கட்டமொன்றில் நிற்கிறார். டெஸ்ட் வாழ்வும் குடும்ப வாழ்வும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து நிற்கின்றன. வோனின் மன உறுதி தடைகளைக் களைந்து தன் குடும்பத்துடன் இணைவதே. இணைந்தால் கிரிக்கெட் வாழ்க்கையும் தொடரக் கூடும். நல்லதே நடக்கட்டும்.

- லிவிங்ஸ்ரன்.



# அஸ்தமனம் நிரந்தரமல்ல

சென்றவாரம் எமது சகபத்தி எழுத்தாளர் நிர்மலன் எழுதிய "தீர்வுதான் என்ன?" என்ற சச்சின் டெண்டுல்கர் பற்றிய குறிப்பை வாசித்த ரசிகர்களுக்கு இரண்டு காரணங்களுக்காக அதனை ஏற்றுக்கொள்வதில் உடன்பாடான கருத்து இருந் திருக்காது. ஒன்று சச்சின் மீது ரசிகர்கள் வைத்துள்ள அபிமானம் காரணமாக. மற்றொன்று அவர் முன்வைத்த அத்தனை விடயங்களுமே சச்சினின் ஒரு பக் கத்தை மட்டுமே ஆய்வுக்குட்படுத்தியதாக அமைந்திருந்தமை.

அந்த வகையில் சச்சினுக்கு இந்திய அணியில் இடம் கிடைப்பது அவர்களது சொந்தப் பிரச்சினை என்றால், உலக அணியில் இடம் கிடைக்குமா என்பது இன் னொரு விவாதம் என்று சச்சினின் உலக அணி தெரிவு குறித்து அவர் விசனப்பட்டி ருந்தார். ஆனாலும் அவருடைய அந்தக் கேள்வியிலேயே அதற்கான பதில் ஒளிந் திருப்பதை பாவம் அவர் அறியவில்லைபோலும்.

உலக அணியில் சச்சின் ஆடுவாரா என்ற ரசிகர்களின் இந்த எதிர்பார்ப்பே அவர் இந்தியாவினது மட்டும் நட்சத்திர வீரர் அல்ல, உலகளவிலும் அவர் ஒரு நட்சத்திர வீரரே (UNIVERSAL HERO) என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை.

அத்தோடு சச்சின் சலெஞ்ஜர் கிண்ணத்தில் பங்குபற்றுவதையும் ஒருவித எள் ளல் தொனியோடு கூறியிருந்தார். ஆறுமாத இடைவெளியின் பின்னர் அணிக்குத் திரும்பியிருக்கும் சச்சின் மீது ரசிகர்களும், ஏனைய இந்திய வீரர்களும் எதிர் பார்ப்பை அதிகம் வைத்திருப்பது தவிர்க்க முடியாததே. எனவே அதனை நிறை வேற்றும் வகையில் உள்ளூர் போட்டிகளில் ஆடி தன்னை ஒருநிலைப் படுத்தி (FORM) அதன் பின்னர் சர்வதேச போட்டிகளுக்கு நுழைய அவர் எடுத்தமுடிவு வரவேற்கத்தக்கவிடயமே.


சச்சின் டெண்டுல்கர் எழுவது நிச்சயம்

மேலும் புதிதாக உள்வாங்கப்பட்ட இளம் வீரர்களுக்கு நிரந்தர இடமில்லாத தால் அவர்கள் மனஉளைச்சலுடன் ஆடியதற்கும், டெண்டுல்கரின் மீள்வருகைக் கும் நிர்மலன் முடிச்சுப்போடுவது பொருத்தமற்ற ஒன்றாகவேபடுகிறது.

ஏனென்றால் சில காலத்துக்கு முன்னர் அவுஸ்ரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் டீன்ஜோன்ஸ் யதார்த்தபூர்வமான கருத்தொன்றை முன்வைத்திருந்தார். அவுஸ்ரேலிய தேசிய அணியில் இடம்பெற்றிருக்கும் வீரர்களுக்கு சமதையாக ஈடுகொடுத்து ஆடக்கூடிய வீரர் கள் உள்ளூரில் உள்ளனர். ஆனால் இந்திய அதியுயர் வீரர்களும் அச்சப்படும் அளவுக்கு நெருக்குவாரத்தை அளிக்கும் வீரர்கள் இல்லையென்று கூறியிருந்தமை இவ்விடம் நினைவு கூரத்தக்கது.

அந்தவகையில் சச்சின் விளையாடாதபோது அந்த இடத்திற்கு ஒரு வீரரைப்போட்டு பதி னைந்து வீரர்கள் கொண்ட பட்டியலை நிரப்புகிறார்களே தவிர, அந்த புதிய வீரர் விடயத்தில் இந்திய அணி நிர்வாகம் நியாயபூர்வமாக நடந்துகொள் கிறதா என்பது சர்ச்சைக்குரிய விடயமே.

அதாவது சிம்பாப்வே முத்தரப்புத் தொடரில் சச்சினுக்கு பதிலாக வேணு கோபால் ராவுக்கும், சுரேஸ் ரெய்னாவுக்கும் இடமளிக்கப்பட்டிருந்தது. இவ்விருவருக்கும் ஒவ்வொரு போட்டியிலும் மாறிமாறி சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டதே தவிர, ஒருவருக்கு மாத்திரம் தொடர்ந்து இடம் வழங்கப்பட வில்லை. அதனால் இருவருமே அந்தத் தொடரில் பிரகாசிப்பதற்கு வாய்ப் பில்லாமல் போய்விட்டது. ஒரு அணியில் வீரர்களை உள்வாங்குவதும், வெளியேற்றுவதும் பயிற்சியாளரும் அணித்தலைவரும் சம்பந்தப்பட்ட விட யம். அவர்கள் இருவரும் செய்யும் தவறுகளுக்கு டெண்டுல்கர் மீது குற்றம் சாட்டுவது எந்தவகையில் நியாயம் என்பதை நிர்மலன் எமக்கு தெளிவு படுத்த வேண்டும்.

சச்சின் - பிரட்மனின் டெஸ்ட் சராசரியான 99.94 என்ற சாதனையைத் தவிர அனைத்து உலக சாதனைகளையும் முறியறித்துவிடுவார் என்பது கிரிக்கெட் விமர்சகர்களது கணிப்பு. வீரர்களுக்கு ஏற்ற இறக்கங்கள் வருவது சகஜமானதே. அதற்கு சச்சினும் விதிவிலக்கல்ல. ஆனாலும் ஏனைய வீரர்கள் போன்றல்ல சச்சினின் வீழ்ச்சி. அவர் எந்த நேரத்திலும் தனது எழுச்சியைக் காட்டக் கூடியவர். பாகிஸ்தான் தொடரிலிலும் ஒரு சதம் அடித்து தன்னை நிரூபித்தவர் அவர். சர்வதேச கிரிக்கெட்டில் பல வீரர்கள் 30 களின் பிற்பகுதியிலேயே தமது சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர். அதற்கமைய அவரின் சாதனைகள் இனிமேல் தான் தொடரப் போகின்றன என்பதில் சந் தேகம் இல்லை.

அத்தோடு சச்சினுக்கு நிரந்தர ஓய்வு கொடுப்பதற்கு அதிக அக்கறை காட்டும் நிர்மலனுக்கு இறுதியாக நான் கூறிக்கொள்வது இதுதான். உலக சாதனை படைத்துவிட்டு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பெரும்பாலான வீரர்களது ஓய்வும் சர்ச்சைக்குரிய ஒன்றாகவே அமைந் திருந்தது. அவ்வாறான ஒரு முடிவை சச்சினும் மேற்கொள்வார் எனில் அதில் எவ்வித தவறுகளும் இருப்பதாய் எமக்குத் தோன்றவில்லை.

**- விமலன்**

# மறக்க முடியுமா?

இந்த விடயம் பற்றி முன்பொருமுறை இந்தப் பக்கத்தில் பேசியிருந்தோம். இப்பொழுது இன்னொருவர் தன் கருத்தைத் தெரிவிக்கிறார். இந்தக் கருத்து மிகக்கனதியானது. ஏனெனில் இதனைக் கூறுபவர் அவுஸ்ரேலியாவின் விக்கெட் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ட். சுப்பசீரிஸ் உலக டெஸ்ட் அணியின் விக்கெட் காப்பா ளர் தென்னாபிரிக்காவின் மார்க் பௌச்சர் எந்த வகையில் இலங்கையின் குமார் சங் ககாரவை விட தகுதி பெற்றுத் தெரிவு செய்யப் பட்டுள்ளார் என்பது தான் அவரது கேள்வி. நடை பெற்று முடிந்த மூன்று ஒருநாள் போட்டிகளிலும் படுதோல்வி கண்டது உலக அணி. ஆனால் துடுப் பாட்ட வீரராகவும், விக்கெட்காப்பாளராகவும், அபாரமாக விளையாடினார் சங்ககார. முரளியின் பந்து வீச்சுக்கு சங்ககார இணைந்து செயற்படும் விதம் சிறப்பாக கில்கிறிஸ்ரின் பார்வையில் பட் டிருக்கிறது. கில்கிறிஸ்ட் இது பற்றிக் கூறும் போது முரளியின் ஆபத்து நிறைந்த கணிப்புக்குட்படுத்த முடியாத சுழல் பந்து வீச்சு துடுப்பாட்ட வீரரையும், களத்தடுப்பாளர்களையும் ஒரேயடியாகக் குழப்பும் தன்மை கொண்டது. இந்த நிலையில் சங்ககார அவரை நன்கறிந்தவர் என்ற வகையில் அவரே கூடுதல் பொருத்தமானவர் என்கிறார்.


அடம் கில்கிறிஸ்ட் ஒரு கூட்டுப் பறவை

மேலும் முன்பு கண்டது போலவே, மார்க் பௌச்சரின் சராசரிகளை விட குமார் சங்ககாரவின சராசரிகள் சிறந்தனவாகும். சங்ககார ஐம்பது டெஸ்ட்போட்டிகளில் 3698 ஓட்டங்கள் பெற்று 48.02 சராசரியைக் காட்ட, மார்க் பௌச்சரோ 84 டெஸ்ட் போட்டி களில் 3007 ஓட்டங்கள் பெற்று 30.68 சாராசரியை கொண்டிருக்கிறார். சுப்பசீரிஸ் ஒரு நாள் போட்டிகளில் சங்ககார 64-61-13 என்று ஓட்டங்களைச் சேகரித்திருந்தார். ஆட்டங்களின் மொத்த என் ணிக்கையைப் பார்க்கும் போது சங்ககாரவின் திறமை புரியும்.

எனவே உலக அணித் தெரி வாளர்கள் டெஸ்ட் அணி விக் கெட் காப்பாளர் தெரிவில் சரி யாக நடந்து கொள்ள வில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. கவாஸ்கர் உள்ளிட்ட தெரிவா ளர்கள் தங்கள் தெரிவுக்கான நியாயங்களை சரிவரவே எடுத் துக் கூறுவார்கள். ஆனால் பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு விடாது என் பதை அவர்கள் தெரிந்து கொள் ளாததுதான் துயரமானது.



குமார் சங்ககார பாடிப் பறந்த குயில்

இன்று அவுஸ்ரேலியா உள்ள வேகத்தில் ஆறுநாள் டெஸ்ட் போட்டியில் உலக அணி சில வேளை வாங்கிக்கட்டிக் கொண்டால் சங்ககார பற்றிய சிந்தனைகள் இன்னும் கூடுதலாக ஏற்படக் கூடும்.

**-ஜெராட்**

# கிண்ணத்தை ஏந்துமா கைகள்?


இங்கிலாந்து உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட் டிக்குத் தகுதிபெற்றுவிட்டது. அதனால் தகுதிப்போட்டிகளி லேயே எதிர்பார்க்கப்படும் நிலையானது உலகக் கிண் ணத்தை வென்றெடுப்பது தான் என்பது ஒன்றும் புதிய சிந்தனையல்ல. இங்கிலாந்து பொறுத்தும் இது தான் நிலை. இருந்தாலும் ஆஸ்திரிய அணியை 1-0 என்று மட்டும் தான் வெல்ல முடிந்தது. அதோடு முன்னதாக வடஅயர்லாந்திடம் 1-0 என்று தோல்வியும் கண்டது. மேலும் மூன்று தகுதிகாண் போட்டிகளிலும் இரண்டு கோல்கள் மட்டுமே போடமுடிந்தது. முன்னதாக இங்கி லாந்தும் கிண்ணத்தை வெல்லும் சாத்தியமுள்ள தொரு அணியாகக் கணிக்கப்பெற்றிருந்தது. ஆனால் தகுதிகாண் போட்டிகள் நடை பெற் றுக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் இங்கிலாந்து அணிபற்றிய மதிப்பீடுகள மாறிக் கொண்டிருக்கின்றன.


எரிக்சன் பாதை தெரியுது பார்

பிரேசில், ஆர்ஜென்ரீனா, இத்தாலி, ஜேர் மனி ஆகிய கவனத்துக்குரிய நாடுகளுடன் சமமாக இங்கிலாந்தை ஒப்பிடமுடியுமா? அவர்களுடன் இங்கிலாந்து சமாளிக்குமா? என்ற கேள்வி இங்கிலாந்தின் பலதரப்பில் இருந்தும் சிறிது கோபமாகவே கேட்கப்படு கின்றது.

இங்கிலாந்து வீரர் மைக்கல் ஓவன் - இங்கிலாந்து தன்னை முதன்மைப்படுத்தச் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன என்று கருதுகி றார். நாங்கள சற்று தளர்ந்துதான் இருக்கிறோம் என்பதை மறைப்பதற்கில்லை. இருந்தாலும் எங்கள் சராசரிகள் மோசமான தாகவும் இல்லை. ஏழு வெற்றிகள் - ஒரு சமன் - ஒரு தோல்வி இருந்தாலும் உலகக் கிண்ணத்தை கையகப்படுத்துவதில் 20% மான வேலைகளை மட்டுமே செய்து முடித்துள் ளோம். இன்னும் 80% வேலைகள் பாக்கி இருக்கின் றன என்கிறார்.

நாங்கள் ஒரு கட்டுக்கோப்பான ஐக்கியப்பட்ட அணி. ஏனெனில் ஆஸ்திரியாவுக்கு எதிரான போட்டி யில் டேவிட் பெக்கம் மைதானத்தில் இருந்து மத்தி யஸ்தரால் வெளியேற்றப்பட்டார். ஆனால் நாங்கள் நிலை குலையவில்லை. எமது வலைப்பின்னல் குலைந்துவிடவும் இல்லை. இது இன்னும் வளர்ச்சி பெற்றேவரும் என்கிறார் ஓவன். ஜோகோல் தன் பங் கிற்கு - ஆஸ்திரியாவை விட போலாந்து அணி பல மானது. அதிலும் பெக்கம் விளையாடமாட்டார். ஆனால் நாங்கள் போலந்தை வீழ்த்துவோம் என்று ஆணித்தரமாகக் கூறுகிறார் ஜோகோல்.


மைக்கல் ஓவன் சாம்ராஜ்யம் சரியாது

இங்கிலாந்து அணியிடம் நிறைய நம்பிக்கை இருக்கிறது. ஓர்மம் இருக்கின்றது. அதோடு தங்கள் பலம் பலவீனம் பற்றிய மதிப்பீடும் இருக்கிறது. பயிற் றுனர் ஸ்வென்கொரன் எரிக்சன் எல்லா வளங்களை யும் ஒன்றிணைக்கப் படாதபாடு படுகின்றார். இங்கிலாந்து வீரர்களும் அவருக்குச் சிறந்த ஒத்துழைப்பையே கொடுக்கின்றார்கள். இங்கிலாந்து உலகக்கிண்ணப் போட்டிகளில் உன்ன தமாக விளையாடி ஏனைய நாடுகளுக்கு தலையிடி கொடுக்குமா?

**-மக்டலின்**



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


# உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் பால் நிலைச் சமத்துவப் பயிற்சி நெறித்திட்டம்




பூநகரி—

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும், ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடனும்- உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் நடத்தப்படும் பால் நிலைச் சமத்துவப் பயிற்சி நெறியின் மற்றுமொரு நிகழ்வு நேற்று காலை 10 மணியளவில் பூநகரி முக்கொம்பன் 65ஆம் வீட்டுத் திட்டத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் கே.தேவிகா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பால் நிலைச் சமத்துவப் பயிற்சிகளை ஒக்ஸ்பாம் நிறுவனத்தைச் சேர்ந்த இ.சமந்தா, இ.விக்னா ஆகியோர் வழங்கினர்.

சமூகத்தில் ஆண்கள், பெண்கள் இருபாலாருக்குமிடையிலான முரண்பாடுகளைக் களைந்து பரஸ்பர நல்லெண்ணங்களையும், நல்லுறவுகளையும் ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த பால் நிலைச் சமத்துவப்பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் வி.அருணாசலம், பால்நிலைச் சமத்துவத்திட்டக் குழுத்தலைவர் ம.ஜெயானந்தன், ஊரகவளர்ச்சிக் குழுத்தலைவர் க.பசுபதி, உழைக்கும் மகளிர் நிறுவனப் பணிப்பாளர்கள், பூநகரி பெண்கள் மேம்பாட்டு உறுப்பினர்கள் மற்றும் சுகாதார தொண்டர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பாலம் புனரமைப்பு

மன்னார்—

மன்னார் பிரதான பாலம் புதிதாக நிர்மாணிக்கப்படுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னார் பாலமும் அதனோடு இணைந்த தாம்போதியும் நூறு கோடி ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது. தற்போது முதலில் பாலம் புனரமைக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக் கப்படுகிறது. ஜப்பானிய ஜெய்கா நிறுவனம் இதற்கான நிதியை வழங்கியுள்ளது.

## மீளக் குடியமர்ந்த மக்கள் நிவாரணமின்றி அவலம்

மன்னார்—

மன்னார், மடுவீதி, தம்பன்னா குளம் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வந்த மக்களை, தற்போது மீள குடியமர்த்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மீள் குடியமர்த்தும் நடவடிக்கையை யு.என்.டி.பி, யு.என்.எச்.சி.ஆர், சோ ஆ மற்றும் மன்னார் அரச செயலகம் ஆகியவை இணைந்தே மேற்கொண்டுள்ளன.

தற்போது இந்தக் கிராமத்தில் 68 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இந்தப் பகுதியில் குடியமர்ந்துள்ள மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், தம்மை மீளக் குடியமர்த்தியது தமக்குச் சந்தோசமாக இருக்கின்றபோதும், தொழில் வாய்ப்புக்கள் இல்லாமையினால் பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும், கடந்த மூன்று மாதங்களாக நிவாரணம் வழங்கப்படவில்லை எனவும் இதனால் இந்தப் பகுதி மக்கள் பெரும் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

## கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிறுவர் பூங்கா, நூலகம் திறந்து வைப்பு

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் சிறுவர்களின் உளநலன் பேணும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா மற்றும் நூலகம் என்பன நேற்று முன்தினம் திறந்து வைக் கப்பட் டன.

கிளிநொச்சி மருத்துவ அதிகாரி சதானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு ஆலோசகர் சிறுவர் பூங்கா மற்றும் நூலகத்தைத் திறந்து வைத்தார். சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதிப்பங் களிப்புடன் 21 லட்சம் ரூபா செலவில் இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

புனரமைப்புச் செய்யப்பட்ட சிறுவர் விடுதி ஒன்றும் நேற்று முன்தினம் திறந்து வைக் கப்பட்டுள்ளது. (அ)

## வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டுவிழா

வடமராட்சி—

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடனும், சிறுவர்பாதுகாப்பு நிதியத்தின் நிதிப்பங்களிப்புடனும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தால் வடமராட்சி கிழக்கு கொடுக்கிளாயில் நேற்றுமுன்தினம் காலை 11.00 மணியளவில், கலாநிதி முன்பள்ளிக் கட்டட அமைவிடத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.

பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் குணலட்சுமி தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில், மங்கள விளக்கினை வடமராட்சி கிழக்குப் பிரதேச இடைத்தங்கல் முகாம் இணைப்பாளர் கிருஷ்ணா, புதுக்குடியிருப்பு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய அபிவிருத்தி இணைப்பாளர் அ.தவசீலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடி, தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி, வடமராட்சி கிழக்குப் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கொடி என்பன ஏற்றிவைக்கப் பட்டதைத் தொடர்ந்து, முன் பள்ளிக் கட்டடத்துக்கான அடிக்கலினை முன் பள்ளிக் கட்டமைப்புத் தலைவர், மற்றும் ஆரம்பபிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு விசேட மேற்பார்வையாளர் சுசிகரன் ஆகியோர் நாட்டிவைத்தனர். வடமராட்சி கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் ஜெயபாலகிருஸ்ணன், இடைத் தங்கல் முகாம் இணைப்பாளர் கிருஸ்ணா, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியை வடமராட்சிக் கிழக்குப் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கட்டமைப்புத் தலைவர் தயானந்தன் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இடம்பெயர்ந்தோருக்கான உதவிப்பணம் இதுவரையில் வழங்கப்படவில்லை

கிளிநொச்சி—

கரைச்சி கிழக்கு உப பணிமனைக்குமுள்ள 3 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு இடம்பெயர்ந்த நிவாரண உதவிப்பணம் இதுவரையில் வழங்கப்படவில்லை.

சிவிக் சென்ரர், மாயவனூர் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளுக்கென நிவாரணம் உதவிப் பணமாக வழங்கப்பட்ட போதிலும், வட்டக்கச்சி, மாவடியம்மன், இராமநாதபுரம் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளுக்கு இதுவரையில் வழங்கப்படவில்லை எனக் கிராம அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசங்களில் இந்த உதவிப்பணம் வழங்கப்படாமையினால் மக்கள் பெரும் பிரச்சினையை எதிர் நோக்குகின்றனர். இந்தப் பிரதேசத்தில் பெருமளவில் வறியமக்கள் வாழ்ந்து வருவதாகவும் அவர்கள் பல கஷ்டங்களை எதிர்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் அவை பயனளிக்காத நிலையில் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**ஒக்ரோபர் – 16**

1793: ஒரு விலங்கின் உறுப்பை எடுத்து, இன்னுமொரு விலங்கிற்கு வைத்து முதன் முதலாக ஒரு அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்த பிரிட்டனைச் சேர்ந்த புகழ் பெற்ற சத்திரசிகிச்சை மருத்துவர் ஜான் ஹண்டர் காலமானார்.

1799: வீரபாண்டிய கட்ட பொம்மன் தூக்கிலிடப்பட்டது.

1846: மயக்க மருந்து கொடுத்து செய்யப்பட்ட முதலாவது அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. பாஸ்ட்டன் என்ற இடத்தில் மாஸா சூஸட் பொது மருத்துவமனையில் ஒரு இளைஞனின் தாடையில் இருந்த கட்டியை டொக்டர் காலின் வரன் என்பவர் மயக்க மருந்து கொடுத்து அகற்றினார்.

1900: சீனாவில்- ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளினது செல்வாக்கு மேலோங்கி வருவதை தடுப்பதை நோக்கமாகக் கொண்டு ஜேர்மனியும், பிரிட்டனும் ஆங்கிலோ ஜேர்மனி உடன் படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. இந்த உடன்படிக்கை சீனாவின் எல்லைகளை அங்கீகரித்தது.

1902: முதன் முதலாக இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்துவதற்கான சீர்திருத்தப் பள்ளி ஒன்று, பிரிட்டனில் ரோசெஸ்ட்டர் என்ற இடத்தில் இருந்த பார்ஸ்டல் சிறையில் திறந்து வைக்கப்பட்டது.

1904: முதன் முதலாக இயற்கை வண்ணத்தில் புகைப்பட தபால் அட்டைகளை ஜேர்மனியைச் சேர்ந்த ரோட்டோ போர்ட் என்ற கம்பனியினர் வெளியிட்டனர்.

1906: கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரப்பிள்ளையால் பங்கு ஒன்றுக்கு பத்து ரூபா வீதம் பத்துலட்சம் மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சுதேசி கப்பல் கம்பனி பதிவு செய்யப்பட்டது.

1917: யூதர்களுக்கு தனியாக ஒரு நாடு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற பால்ஃ போரின் அறிக்கையை, அமெரிக்க அதிபர் உட்ரோவில்சன் ஆதரித்து அறிக்கை வெளியிட்டார்.

1934: லட்சக் கணக்கான சீன மக்கள் மாஸேதுங்கினுடைய கம்யூனிச சித்தாந்தத்தினால் கவரப்பட்டனர். அவரது செஞ்சேனைக்கு பல ஆயிரம் இளைஞர்கள் வந்து சேர்ந்தனர். செஞ்சேனை பல நகரங்களில் தேசியப் படைகளைத் தடுத்து முடக்கியது. இந்த நிலையில் சீன அரசு அதிரடிப் படையணிகளை அமைத்து செஞ்சேனையைத் தாக்க ஆரம்பிக்கவே, மாஸேதுங கியாங்ஸீ மாகாணத்தில் இருந்த தனது பிரதான தளத்தை தந்திரோபாயமாகக் கைவிட்டு தனது கர்ப்பிணியான மனைவியுடனும், 30 000 செஞ்சேனை வீரர்களுடனும் வரலாற்றுப் புகழ் பெற்ற நெடும் பயணத்தை(Long March) ஆரம்பித்தார்.

1940: அமெரிக்காவில் தேர்வு பயிற்சிச் சட்டம் என்ற சட்டத்தின் கீழ் ஒரு கோடியே அறுபது லட்சம் அமெரிக்கர்கள் இராணுவப் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டனர்.

1944: இந்தியாவில் எம்.கே.தியாகராஜ பாகவதர் நடித்த ஹரிதாஸ் திரைப்படம் வெளியிடப்பட்டது. மூன்று தீபாவளிகளைக் கடந்து ஒரே திரையரங்கில் 768 நாட்கள் ஓடி சாதனை படைத்தது.

1951: பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலிகான் ஆப்கானிஸ்தான் தீவிரவாதி ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார்.

1964: சீனா சிங்கியாங் மாகாணத்தில் அணுகுண்டு வெடிப்பு சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. உடனேயே உலக நாடுகள் அணு ஆயுதங்கள் தயாரிப்பதை நிறுத்தவும், கையிருப்பு அணு ஆயுதங்களை அழிக்கவும் வகை செய்யும் உச்சகட்ட பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்று கோரியது.

1965: வியட்நாம் போரை எதிர்த்து அமெரிக்காவில் நடந்த ஆர்ப்பாட்டங்களின் போது, இரண்டு குவேக்கர் இன ஊழியர்களும், ஒரு கத்தோலிக்க மத குருவுமாக மூவர் தீக்குளித்தனர்.

1979: பாகிஸ்தானில் அரசியல் கட்சிகள் அனைத்தும் தடை செய்யப்பட்டன.

1986: 1978 இல் உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் சிகரத்தை பிராணவாயுவின் உதவியில்லாமல் முதன் முதலாக சென்றடைந்தவரான இத்தாலியைச் சேர்ந்த ரெயின்ட் கோல்ட் மெஸ்னர் உலகின் நான்காவது உயர்ந்த சிகரமான 8516 மீற்றர் உயரமுடைய லோட்ஸே சிகரத்தை ஏறிச் சென்றடைந்தார். இதன் மூலம் உலகிலுள்ள 14 உயர்ந்த சிகரங்களையும் ஏறியவர் என்ற பெருமையையும் பெற்றுக் கொண்டார்.

* உலக உணவு பெருக்க நாள்.

தொகுப்பு~ சந்துரு

## வீதி ஒழுங்கு நடவடிக்கை தீவிரம்

அக்கராயன்—

தமிழீழ காவற்துறையினரால் வீதி நடவடிக்கைகள் தீவிரமாக நடை முறைப்படுத்தி வருகின்றனர். இதில் ஒரு கட்டமாக அக்கராயன் பிரதேச காவற்துறையினர் வீதிகளில் திடீர் சோதனைகளில் ஈடு பட்டு, போக்குவரத்து வீதிமுறைகளை மீறும் வாகன உரிமையாளர் களுக்கு விளக்கங்களை அளித்து வருவதுடன் அவர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

வாகனம் ஓட்டுநர்கள் மற்றும் வீதியில் நடந்துசெல்லும் அனைவரும் வீதி ஒழுங்குகளை கடைப்பிடித்தால் விபத்துகளைத தடுக்களமுடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

அதிகாரம் இருக்கும்பொழுது எப்படிச் செயற்படுகிறான் என்பதைப் பார்த்து ஒருவனை எடைபோடலாம்.

- பிட்டாகஸ் -

## நமது நோக்கு

### வேகம் கொள்ளும் பேரினவாதமும் உயிர்ப்படங்கிவரும் சமாதான சூழலும்...

நெருக்கடிக்குள்ளாகியுள்ள போர்நிறுத்த உடன்பாடு தற்போதைய நிழல்யுத்த செயற்பாடுகள் மூலம் மெல்லமெல்ல உயிர்ப்பிழந்துவரும் வேளையும், அதனை மீண்டும் ஸ்திரப்படுத்தி பேணிப்பாதுகாக்கும் 'விக்கிரமாதித்த'முயற்சியில் நோர்வே நாட்டின் அமைதி முயற்சிகளுக்கான அனுசரணையாளர்கள் மீண்டும் தீவிரமாக இறங்கியுள்ளதாகத் தெரிகிறது.

குறிப்பாக போர்நிறுத்த உடன்பாட்டின் விதிமுறைகளை முழுமையாகவும், இறுக்கமாகவும் நடைமுறைப்படுத்துவது குறித்த பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருதரப்பினர்களுமான இலங்கை அரசு மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆகியோரை நேரில் சந்தித்துப் பேச்சுக்களை ஆரம்பிக்க வைக்கும் கடும் முயற்சியில் நோர்வேயின் விசேட தூதுவர் ட்ரொன்ட் புறாவ் ஹொவ்டே அவர்கள் ஈடுபட்டுள்ளபோதும் அதன் முன்னேற்றம் குறித்து, குறிப்பிட்டுச் சொல்லும்படியாக எந்த நகர்வும் நடைபெறவில்லை என்பதை நோர்வே மற்றும் அரச தரப்பினரின் மௌனம் உறுதி செய்வதாகவுள்ளது.

எனினும்கூட, இரு தரப்பினரும் பேச்சுக்களை மேற்கொள்வதற்கு சம்மதிக்கக் கூடியவகையில் பொருத்தமான ஒரு இடத்தை முதலில் தெரிவு செய்யும் முயற்சியில் நோர்வே அனுசரணையாளர்கள் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் ஆலோசனையை அரசும், அரசின் ஆலோசனையை விடுதலைப்புலிகளும் சாத்தியமற்றவை எனக் கூறி நிராகரித்துள்ள நிலையில் - இரு தரப்பினரும் உடன்படக்கூடியதான ஒரு பொது இடத்தைத் தெரிவு செய்வது என்பது நோர்வே தரப்பினருக்கு கடினமான பணியாகவே உள்ளது.

கடந்த வியாழன்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கட்கும் நோர்வேயின் 'புறாவ் ஹொவ்டே' அவர்களுக்குமிடையே நடந்த சந்திப்பின்போது 'போர்நிறுத்த உடன்பாட்டு நிபந்தனைகளை இருதரப்பினரும் முழுமையாக அமுல செய்யாவிட்டால் சமாதானச் சூழலைத் தொடர்ந்து பேணக்கூடிய நிலை இருக்காது' என அரசியற்துறைப் பொறுப்பாளர் வலியுறுத்தியுள்ளதுடன், பேச்சுவார்த்தைக்கென தெரிவாகும இடம் பெருத்தமானதாக இருக்குமெனில், பேச்சுக்களில் கலந்துகொள்ள புலிகள் தரப்பு எப்போதும் தயாராகவே உள்ளது. என்ற தமது நிலைப்பாட்டையும் உறுதி செய்திருந்தார்.

இந்த நிலையில், பேச்சுவார்த்தைகளுக்கான இடத்தெரிவு என்பதுதான் சிக்கலான விடயமென்று பிரஸ்தாபிக்கப்பட்டாலும, அரச தரப்பின் அலட்சியமும், அர்த்தமற்ற காரணங்களை முன்வைத்து பிரச்சினைகள் அனைத்தையும் இழுத்தடிக்கும் அதன் வழமையான தந்திரோபாயமும், ஜனாதிபதியின் நழுவல் நடவடிக்கைகளுமே இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணமுடியாத நிலையை தோற்றுவித்துள்ளது என்பதே உண்மையாகும்.

இன்னும் சிலவாரங்களில் தனது நிறைவேற்று அதிகாரப் பதவிக்கதிரையில் இருந்து இறங்கவேண்டிய நிலையில் உள்ள ஜனாதிபதி, தன்னுடைய காலத்தில் தான் எந்தவித சமாதான நகர்வுகளையும் மேற்கொள்ளாது, பேரினவாத சக்திகளிடம் நல்லபெயர் வாங்கும் நோக்கிலேயே தற்போதைய நெருக்கடி நிலையைத் தணிக்கும் கடமைப் பொறுப்பை தட்டிக்கழித்துவிட்டு பல்வேறு அரசியல் உள்நோக்கங்களுடன் வெளிநாட்டுப்பயணங்களில் காலத்தை செலவிட்டு வருகிறார் என்றே மக்கள தரப்பு கருத்துத் தெரிவிக்கிறது.

இது ஒரு அப்பட்டமான அரசியல் உள்நோக்குடன் கூடிய சமாதான விரோத நகர்வேயாகும்.

நோர்வே அனுசரணையாளர்களின் பேச்சுக்களில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுவோர்களான அரச தரப்பினரும் தீர்க்கமாக எதனையும் கூறும் வலுவற்றவர்களாகவே உள்ளனர். ஜனாதிபதி நாட்டில் இல்லாத சூழலில் - பிரதமர், ஜனாதிபதிக் கதிரையை தமதாக்கும் நோக்கில் தேர்தல் பிரசாரப்பயணத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், சமாதான முயற்சிகள் குறித்தோ, நாட்டில் அமைதிச் சூழலுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக் குறித்து ஆழமாகச் சிந்தித்து, உரியவர்களுடன் தொடர்புகொண்டு முடிவு கூறவோ, நடவடிக்கை எடுக்கவோ பொறுப்புணர்ந்து செயற்படும் எவரும் இல்லை என்பதே உண்மையாகும்.

நாட்டின் இன்றைய குழப்ப - மற்றும் நெருக்கடி நிலையையும அரசியல் ஆதாயத்திற்காக, பிரசார நடவடிக்கைகளுக்காக, பயன்படுத்தத்துடிக்கும் தென்பகுதி பௌத்த சிங்களப் பேரினவாத தலைமைகளுக்கு 'நாடு குழம்பினால் நமக்கு நல்லது' என்ற குறுகிய சிந்தனைப் போக்கே உள்ளது.


இந்த நிலையில் நோர்வேயின் பகீரத முயற்சிகளுக்கு அரச தரப்பிலிருந்து ஆக்கபூர்வமான பதில்வரும் சூழல் இப்போதைக்கு உருவாகும் என நம்புவது கடினமேயாகும். தேர்தல் முடிந்து புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் அவர் எடுக்கப்போகும் முடிவை வைத்தே சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்த தீர்மானத்தை எவராலும் எடுக்க முடியும் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் இப்போது மேற்கொள்ளும் முயற்சிகள் யாவும அர்த்தமற்றதாகவே இருக்கும்.

ஆனால், அடுத்த ஜனாதிபதிக் கதிரையில் அமரும்வரைக்கும நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையும், நிழல்யுத்தத்தின் தாக்கமும் சமாதான சூழலைத் தொடர்ந்தும் தக்கவைக்குமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கும்.

இது குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டியது - சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகமும், அதற்கான அனுசரணைப் பணியில் அயராது உழைக்கும் நோர்வே அனுசரணையாளர்களும மட்டுமே...!

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# படைகள் வெளியேறினால் கொலையும் நிற்கும் உண்மையும் தெரிந்துவிடும்!

விடுதலைப் புலிகள்மீது எப்படிப் பழியைச் சுமத்தி விடுதலைப் போராட்டத்தை நசுக்கலாம் என்பதையே சிந்தனையாகக் கொண்டு செயற்படும் ஆதிக்க சக்திகளும், சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளும் இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்றும் அதிகாரப் பகிர்வு என்றும் ஒற்றையாட்சியில் சகலருக்கும் சம உரிமை என்றும் உலக சமுதாயத்துக்கு போக்குக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னபடி வந்தார் பரமசிவம்.

முன்னர் நாட்டில் இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டு இனப்படுகொலையிலீடுபட்டவர்கள் இப்பொழுது தமிழ் மக்களிடையே பிளவையும், பிரிவினையையும் ஏற்படுத்தி, தமிழர்களே தமிழர்களை அழித்தொழிக்கும் செயல்களில் ஈடுபடுவதற்கு வழிவகுத்து வெற்றிகண்டு வருகின்றனர். தமிழர்கள் கல்வியில் முன்னேற்றம் கண்டதால், பொறாமை கொண்டவர்கள் தமிழர்களின் கல்வியைக் கெடுக்கப் பல நடவடிக்கைகளையும் எடுத்தனர். போரினாலும் கடற்கோள் என்ற இயற்கையினாலும் தமிழர்கள் பல அழிவுகளைச் சந்தித்தாலும் கல்வியில் அவர்கள் முன்னேற்றம் பெறுவதைத் தடுக்கமுடியாமலிருப்பது கண்டு இப்பொழுது கல்விமான்களையே அழித்தொழிக்கும் நடவடிக்கைகளும்கூட மேற்கொள்ளப்பட்டுவருகிறது என்று நான் சொன்னேன்.

விடுதலைப் புலிகள் கொலை செய்கிறார்கள், கொல்லுகிறார்கள் என்று ஓயாமல் பிரசாரம் செய்வதன் மூலம் எந்தக் கொலையையும் புலிகள் மீது சுமத்தியே உலக நாடுகளை நம்பச் செய்யலாம் என்று பேரினவாதிகள் துணிந்துள்ளனர். கொலைகளை யார் செய்கிறார்களோ, யார் மீது பழியைப் போடுகிறார்களோ என்பது பற்றிய கவலையைவிட்டு கொலைகளை உடனடியாக நிறுத்துவதற்கு என்ன வழி என்பது பற்றி ஆராய்ந்து ஒரு முடிவு காணவேண்டிய அவசியம் வந்துவிட்டது. கிழக்கில் கொலைகளைச் செய்துவிட்டுப் புலிகள்மீது பழிபோட்டார்கள்.

இதற்குக் கோடரிக் காம்பு ஒரு துரும்பாகக் கிடைத்தது. இப்பொழுது கொலைகளை தேர்தல் பிரசாரத்தோடு இணைத்து வடக்கிலும் தொடர்வதற்கு வெற்றிகரமாக முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்தில் சில தினங்களில் இரு கல்விமான்கள் கொலை செய்யப்பட்டதற்கு புலிகளே காரணமென்று அரசாங்கப் புலனாய்வுப் பிரிவு அறிவித்திருக்கிறது. எந்தக் கொலையானாலும் புலிகளே காரணமென்று கூறப்படுவதுபற்றி யார் ஆராய்ந்து உண்மையைச் சொல்லப் போகிறார்கள்? ஆனால், பாதுகாப்புப் படைகள் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் குவிக்கப்பட்டிருக்கும் படைகள் இருந்தும் இப்படிக் கொலைகள் தொடருவதாக இருந்தால், இவைகள் இந்தப் பகுதியில் எதற்காகத் தங்கியிருக்கின்றன. வடக்கிலும் கிழக்கிலும் கொலைகள் நிறுத்தப்படவேண்டுமானால், உடனடியாகவே இந்தப் பாதுகாப்பில்லாத படைகளை அரசாங்கம் திருப்பியழைத்துக் கொள்ளவேண்டாமா? என்று பரமசிவம் கேட்டார்.

ஆனால், சங்கரியார் தேர்தல் ஆணையாளருக்கு எழுதியிருக்கும ஒரு கடிதத்தில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் - வடக்கில் தெரிவத்தாட்சி அதிகாரிகளாகத்தமிழர் நியமிக்கப்படக்கூடாதென்றும், சிங்களவர்களையே தெரிவத்தாட்சி அதிகாரிகளாகவும், தேர்தல் அலுவலர்களாகவும் நியமிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். இது மட்டுமன்றி இங்குள்ள பொலிஸாரை கடமைக்காக இடம் மாற்றாமல் மேலதிகமாகப் படையினரைக் கடமையாற்ற அனுப்ப வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். சென்ற தேர்தலில் அவருக்கு ஏற்பட்ட தோல்வி, தமிழ் அரசாங்க ஊழியர் மீது அவருக்குப் பெரும் கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. முன்பெல்லாம் தமிழ் அரசாங்க ஊழியர் மீது சிங்கள பௌத்த பேரினவாத அரசியல்வாதிகளே குற்றம் சுமத்துவார்கள். இப்பொழுது சங்கரியார் சிங்கள சங்கரியாராக மாற்றம் பெற்றிருக்கிறார்.

இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்பதற்காக 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மக்களிடம் ஆணைபெற்ற சங்கரியார் தமது தோல்வியினால் சிங்கள அரசைப் பாதுகாக்க மக்களிடம் ஆணை பெற்றுவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார். தமிழீழத்துக்காக ஆயுதம் ஏந்தியவர்கள் தங்களால் எதுவும் செய்து வெற்றியீட்ட முடியாமல் போனதால் தமிழீழத்தில் பெரும் பகுதியை விடுவித்து வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் போராளிகளைத் தோற்கடிக்கும் பிரசாரத்தில் சிங்கள பேரினவாதிகளுடன் சேர்ந்தியங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன்.


கிழக்கில் தொடர்ந்து தாக்குதல்களும், கொலைகளும் நீடித்துவருகின்றன. அதேசமயம் வடக்கிலும் தாக்குதல்களும் கொலைகளும் தொடங்கித் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆட்சியாளர்களுக்குச் சாமரம் வீசும் தமிழ்க் குழுக்கள் மற்றும் புலி எதிர்ப்பு சக்திகளின் ஒத்துழைப்புடன் அரச புலனாய்வுப் பிரிவும், படைத் தரப்புமே இவற்றுக்குக் காரணமென்பதைக் கண்டுபிடிப்பதற்கு பெரிய ஆராய்ச்சி தேவையில்லை. இந்தப் படைகளை இப்பகுதிகளிலிருந்து வெளியேற்றினாலே நாட்டின் உண்மை நிலை தெரிந்துவிடும். இந்தக் கொலைகள் யாவும் படைகளின் வெளியேற்றத்துடன் நின்றுவிடும். கையாலாகாதவர்களின் கெட்டித்தனமும் புரிந்துவிடும் என்று சொன்னபடி நடந்தார் நண்பர் பரமசிவம்.

## வாசகர் நோக்கு

### 'உதை' பந்தாட்டமா? உதைபந்தாட்டமா?

அண்மையில் வடமராட்சிப் பகுதியில் ஓர் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி ஜனசக்தி சுழல் கிண்ணத்துக்காக நடைபெற்றது. இந்தப் போட்டி முடிவடைந்ததும் இரு அணி வீரர்களும், ஆதரவாளர்களும் முட்டி மோதிக்கொண்ட சம்பவம் விளையாட்டு மைதானத்தையே போர்க்களரியாக மாற்றி விட்டது. இந்தப் போட்டியின் இறுதிக்கட்டத்தில் இரு அணி வீரர்களும் "உதை" பந்தாட்டத்தை விளையாடியமையினால் நடுவரால் எச்சரிக்கப்பட்டும் இடைநிறுத்தியும் வைக்கப்பட்டனர். அன்றைய தினம் இந்தக் கலவரத்தின் எதிரொலி இந்தப் பிரதேச வீடுகளிலும், வீதிகளிலும் கூட எதிரொலித்தது. எது எப்படியோ விளையாட்டு என்பது வீரர்களுக்கிடையே ஒற்றுமை, நல்லிணக்கம், சகிப்புத்தன்மை ஆகிய உன்னதமான குறிக்கோள்களை அடைவதை நோக்கமாகக் கொண்டது. இவற்றை மனதில் கொண்டு விளையாட்டுக் கழகங்களும், வீரர்களும், பார்வையாளர்களும், மனிதப் பண்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

மு.ஸ்ரீவர்ணன் நெல்லியடி.




# எல்லோரையும் காக்கும் வல்லிபுர மாயவன் தேரேறி வருகிறான்

**"நீராய் நிலமாய் தீயாய் காற்றாய்
நெடுவானாய்
சீரார் சுடர்கள் இரண்டுமாய்
சிவனாய் அயனானாய்
கூர் ஆர் ஆழிவெண் சங்கேந்தி
கொடியோன் பால்
வாராய் ஒரு நாள் மண்ணும்
விண்ணும் மகிழவே"**

ஈழமண்டலமாம் இலங்கையின் வடக்கின் கண்ணேயுள்ள யாழ்ப்பாணத்தினது வடகீழ்ப் பகுதியாகிய, வடமராட்சியின் சமுத்திரத்தீரத்துக்கணித்தாக ஆன்ம கோடிகளை இரட்சிக்கும் பொருட்டு ஸ்ரீபூமி நாயகராகிய பகவான் மகாவிஷ்ணு மூர்த்தியானவர் - மச்சாவதாரமாகிய திரு அவதாரத்தை எடுத்துக் காத்தற் கடவுளாய் "வல்லிபுரம் எனும் திவ்ய க்ஷேத்திரத்தில்" கோயில் கொண்டு அருள்பாலித்து வருகின்றார்.

எழுவான் திசையில் வல்லிபுர ஆழ்வார் ஆலயமும், படுவான் திசையில் (சுவர்ண) பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயமும் உள்ளன என்று தட்சண கைலாச மான்மியத்திலே சொல்லப்பட்ட பழமையாகிய விஷ்ணு தலங்கள் இவையாகும். திருப்பாற்கடலருகே சக்கரத்தாழ்வாராக வீற்றிருந்து, தன் நல்லடியார்களைக் காத்தருள்கின்றான். முன்னொரு காலத்தில் திருப்பாற்கடல் பெருக்கெடுத்து வந்தபோது, தடுத்தாட்கொண்டு தன் பக்தகோடிகளைக் காத்தருள் புரிந்தான் என்ற கர்ணபரம்பரைக் கதையைச் செவிமடுக்கின்ற பொழுதிலே நெஞ்சம் நெகிழ்ந்திடும்.

ஈழமணித்திருநாட்டில் காத்தற் கடவுளாக விளங்கும் விஷ்ணுவுக்கு மிகச் சிறப்பாக அமைக்கப்பட்ட ஆலயமாக ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம் விளங்குகின்றது. ஏழு தளங்களையுடைய 71அடி உயரம் கொண்ட இராஜகோபுரம், அதில் காணப்படும் சிற்பங்கள் எல்லாமே ஆலயத்துக்கு பேரழகை வருவித்துக் கொண்டிருக்கின்றன.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட இந்த ஆலயம் யாழ்ப்பாண இராச்சியத்தின் பழைய இராசதானியாகிய சிங்கை நகர் என அறிஞர்கள் பலர் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த ஆலயத்தில் வேறெந்த விஷ்ணு ஆலயத்திலும் இல்லாத ஒரு சிறப்பு என்னவென்றால், கருவறையிலே (கர்ப்பக்கிரகத்தில்) கிருஷ்ண பரமாத்மாவின் ஆயுத மாகிய "சக்கரம்" பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபட்டுவருவதுடன், வசந்த மண்டபத்திலும் சக்கரமே வைத்து பூசிக்கப்படுகிறது.

இந்தச் சக்கரம் விஷ்ணுவுக்கு சிவபெருமானால் கொடுக்கப்பட்டதாகப் புராண வரலாறுகள் கூறுகின்றன. அழித்தற் கடவுளாம் சிவபெருமானை நினைத்து சிவலிங்கம் ஒன்றுக்கு, விஷ்ணு தினமும் ஆயிரம் தாமரைப் பூக்களால் அர்ச்சனை செய்து, வழிபட்டு வருவது வழக்கம். விஷ்ணுவின் அளப்பரிய பக்தியின் மகிமையை உலகுக்கு வெளிக்காட்ட விரும்பிய சிவபெருமான், விஷ்ணு அர்ச்சனை செய்வதற்காக தட்டில் எடுத்து வைத்திருந்த ஆயிரம் தாமரைப் பூக்களில் ஒரு தாமரைப் பூவை மறைத்து விட்டார்.

விஷ்ணு ஒவ்வொரு தாமரைப் பூவாக எடுத்து அர்ச்சனை செய்து வரும் போது, ஒரு தாமரைப்பூ குறைந்து விட்டதே, அதனை நிவர்த்தி செய்ய வேண்டுமென எண்ணி தனது இரு கண்களில் ஒரு கண்ணைத் தோண்டி எடுத்து அதனால் அர்ச்சனை செய்ய முற்பட்டார்.

விஷ்ணுவின் பக்தியை உணர்ந்த சிவபெருமான் அச்சிவலிங்கத்தில் இருந்து தோன்றி கண்ணைத் தோண்டி எடுக்க விடாது, விஷ்ணுவைத் தடுத்ததுடன், அவரது பக்தியைப் பாராட்டி சக்கர ஆயுதத்தை வழங்கியதாக அவ்வரலாற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் காட்சி, இந்த ஆலயத்தின் மூலஸ்தான கோபுரத்தில் வடக்குப் பக்கமாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்வாறான பெருமை மிக்க இந்தச் சக்கரத்தை வைத்து பூசிக்கப்படுவதற்குக் கூட புராண வரலாறு உண்டு.

**சக்கரத்தாழ்வார்**

ஸ்ரீமந்நாராயணனுக்கு அமைந்த ஆயுதங்கள் ஐந்தாகும். இந்தப் பஞ்ச ஆயுதங்களே நாராயணனுக்குத் திவ்ய ஆபரணங்களாகவும் விளங்குகின்றன. நாராயணருக்கு வைகுந்தத்தில் இருந்து பணி செய்வதே பஞ்சாயுதங்களின் பெரும் பேறாகும். ஆயுதங்களாகவும், திருவடி நிலையா கவும், பட்டுப் பீதாம்பரமாகவும், படுக்கையாகவும், தலையணையாகவும், குடையாகவும், சிங்காதனமாகவும் பல நிலைகளிலும் உருவெடுத்து அடிமைப்பணி செய்வர்.

இப்படிச் சக்கரப் படையாக அடிமை செய்யும் நித்யசூலி சுதர்சனம் எனப்படுவர். இவர் பஞ்சாயுதங்களின் முதன்மை பெற்றவர். இவர் என்றுமே இறைவனை விட்டுப் பிரியாதவர். சுதர்சனமே விஷ்ணுவாகும். விஷ்ணுவே சுதர்சனமாகும். சுதர்சனச் சக்கரமானது இறைவனைப் போலவே ஆதியந்தம் எதுவும் இல்லாததாகும்.

இத்தகு புராண வரலாற்றுப் பெருமைச் சிறப்புடைய சக்கரத் தாழ்வாராக வீற்றிருந்து அருள் பொழிகின்றார் வல்லிபுர ஆழ்வார். இதைவிட இன்னோர் சிறப்பு கடல் தீர்த் தோற்சவம். ஆலயத்திலிருந்து சுமார் மூன்று மைல் தொலைவிலுள்ள வங் கக் கடலில் (அதாவது விஷ்ணு மச்ச அவதாரமாக எழுந்து வல்லியின் மடியில் தங்கிய பகுதி) வெகு சிறப்பாக நடைபெறும்.

இத்தகு பெருமைகளைக் கொண்ட ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவவிழா பக்திப் பெருவிழாவாக நடைபெறுகின்றது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெருந்திரளானோர் கலந்து கொண்டு, தமது நேர்த்திகளை நிறைவேற்றுகின்றார்கள்.

**மதுரகவி.காரை.எம்.பி.
அருளானந்தன்**

"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"

வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

AHAVILI,3,
Torrington Avenue,
Colombo - 7,
Sri Lanka.

T.P. 011- 2506272, E-Mail:ahavili@viluthu.org

(C/4683)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/காரைநகர்.வலந்தலை வடக்கு
அ.மி.த.க வித்தியாலய அதிபர்
திருமதி.த.நாகரத்தினம்
அவர்கள்

தீவகக் கல்வி வலயத்திலிருந்து ''சிறந்த அதிபராக'' தெரிவு செய்யப்பட்டு 06.10.2005 இல் திருகோணமலையில் கல்வி அமைச்சும், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து நடாத்திய உலக ஆசிரியர் தினம் - 2005 கௌரவிப்பு விழாவில் விருதினையும், சான்றிதழையும் பெற்றதனை பெருமகிழ்வோடு பாராட்டுவதுடன், மென்மேலும் சேவையில் உயர்ந்து நலன்கள் பலவும் பெறவேண்டுமென உளப் பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்.

[2083]

UNIT

3 வருட முழு உத்தரவாதம்
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கணினியுடனும்
Free
UPS, Screen Filter,
Dust cover, Mouse Pad.

No Additional Charges for Warranty Claim

All Based on Colombo Price

நாங்கள் கணினியை மாத்திரம் வழங்கவில்லை. அவற்றை மெருகூட்டி வழங்குகிறோம். எங்கள் அனுபவ பயிற்சியினை மூலமாக

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737



முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

வளலாய் அச்சுவேலியைச் சேர்ந்த சுபீஸ்கரன் –கௌரி தம்பதியினரின் செல்வப் புதல்வி தீபிகா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (16.10.2005) தனதில்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா,அம்மம்மா, பெரியப்பா குடும்பத்தினர், அத்தை குடும்பத்தினர், சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார், அக்காமார், அண்ணன்மார், பெரியம்மாமார் மற்றும் பேரன், பேர்த்திமார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும், இவர் இறையருளால் பல்லாண்டு காலம் பல்கலையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

அம்மப்பா.


தீபிகா
16.10.2005



"தாய் இல்லம்"
வளலாய், அச்சுவேலி.

(C/4731)

# பிரபல தமிழ் எழுத்தாளர் சுந்தர ராமசாமி காலமானார்!



சென்னை —

பிரபல தமிழ் எழுத்தாளர் சுந்தர ராமசாமி (வயது 74) அமெரிக்காவில் காலமானார்.

அவருக்கு மனைவி கமலா, மகனும் காலச்சுவடு ஆசிரியருமான ஆர்.கண்ணன் மகள்கள் தைலா தங்கு ஆகியோர் உள்ளனர். அவரது உடல் அமெரிக்காவிலிருந்து நாகர் கோவிலுக்குக் கொண்டு வரப்படவுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர் கோவிலில் 1931 ஆம் ஆண்டில் பிறந்தவர் சுந்தர ராமசாமி. 1951 இல் 'தோட்டியின் மகன்' என்னும் மொழிபெயர்ப்பு நூல் மூலம் இலக்கியத்தில் தடம் பதித்தார். அதே ஆண்டில் புதுமைப்பித்தன் நினைவு மலரையும் அவர் வெளியிட்டார். அவரது முதல் கதையான 'முதலும் முடிவும்' அதில் இடம்பெற்றது.

பசுவய்யா என்ற பெயரில் கவிதைகளை எழுதியுள்ளார். 'புளிய மரத்தின் கதை' 'ஜே.ஜே சில குறிப்புகள்' உட்பட 3 நாவல்களும் 60 க்கும் மேற்பட்ட சிறுகதைகளும் எழுதியுள்ளார்.

1988 இல் காலச்சுவடு இலக்கிய இதழைத் தொடங்கி எட்டு இதழ்களையும் ஓர் ஆண்டு மலரையும் வெளியிட்டார்.

1998 குமாரன் ஆசான் நிறைவுப் பரிசு பெற்றார். இலக்கிய சாதனைக்காக டொரொன்டோ பல்கலைக் கழகம் 2001 ஆண்டு இவருக்கு இயல் விருது வழங்கி சிறப்பித்தது.

2003 இல் அவரது வாழ் நாள் இலக்கியப் பணிக்காக கதா சூடாமணி விருது வழங்கப்பட்டுள்ளது.

சுந்தர ராமசாமி எழுதிய 'ஒரு புளியமரத்தின் கதை' நாவல், ஆங்கிலம், இந்தி, மலையாளம், ஹீப்ரு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. 'ஜே.ஜே சில குறிப்புகள்' ஆங்கிலத்திலும் மலையாளத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இவரது 26 சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன.

## வீரப்பனின் சமாதி அருகே திடீரென முளைத்த வாசகங்கள்

மேட்டூர் —

மேட்டூர் அருகே வீரப்பன் சமாதி அருகிலுள்ள பாறையில் திடீரென எழுதப்பட்ட வாசகங்கள் அழிக்கப்பட்டுள்ளன.



திடீரென முளைத்த இந்த வாசகங்களை எழுதியது யார், அழித்தது யார் என்பது குறித்து புலனாய்வுத்துறைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்ற னர்.

மேட்டூர் அருகே, மூலக் காட்டில் வீரப்பன் சமாதி உள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதி வீரப்பனின் முதலாமாண்டு நினைவு தினத்தில், சமாதி முன் - அதிரடிப்படையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முத்துலட்சுமி புதிய இயக்கம் தொடங்குவதாக அறிவித்திருந்தார். இதற்கு ஒரு சிலரிடமிருந்து கடும் எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. இதனால் வீரப்பன் சமாதி அமைந்துள்ள மூலக் காடு கிராமம் பரபரப்பாகியுள்ளது.

வீரப்பன் சமாதி அருகே சிறிய பாறையில், வீரம் இங்கே விதைக்கப்பட்டுள்ளது. வீரப்பன் மனிதன், வீரம் மிக்கவன். பல ஆண்டு தேடுதல் வேட்டைக்கு பின்புதான் அதிரடிப்படையால் வீரப்பனை பிடிக்க முடிந்தது. அவனது உடல் எனும் விதை இந்த மண்ணில் விதைக்கப்பட் டுள்ளது. இந்த விதையைப்போல மேலும் பல வீரப்பன்கள் உருவாகுவார்கள் என்று எழுதப்பட்டிருந்தது.

வீரப்பனின் முதலாமாண்டு நினைவுதினம் நெருங்கும்வேளையில், அவரது சமாதி அருகே இதுபோன்ற வாசகம் எழுதி அழிக்கப்பட்டுள் ளது பொது மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது. இந்த வாசகத்தை வீரப்பன் ஆதரவாளர்கள் எழுதியிருக்கக்கூடும். அதேநேரம் எதிர்ப்பாளர்கள் யாரேனும் அழித்திருக்கலாம். எனவே, வாசகத்தை எழுதியது யார், அதை அழித்தது யார் என்பது குறித்து புலனாய்வுத்துறை பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

புத்தம் புதிய DAIDO BRAND NEW




0112 341580, 0112 341581

## தவறிவிட்டது

*14.10.2005 அன்று காலை 9 - 10 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் குஞ்சுப்பரந்தனுக்கும் ஆனையிறவுக்கும் இடையே தங்கக் கைச்செயின் ஒன்று தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அ.ரவீந்திரன் கரித்தாஸ், கியூடெக், கிளிநொச்சி என்ற முகவரியுடனோ அல்லது 021 - 228 5805 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறோம்.* *(815)*

# ஐரோப்பிய யூனியன்...

புலிகளுக்கெதிராக ஐரோப்பிய யூனியன் எடுத்த இந்தத் திடீர் முடிவு தமிழ் மக்களைத் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த மூன்றரை வருட சமாதான காலத்தில் சிங்கள அரசு உடன்பட்டவற்றை நடைமுறைப்படுத்தாது சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் தமிழ் மக்களை ஏமாற்றி வந்துள்ளது.

ஆயினும், சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கிணங்க புலிகள் இயக்கம் பொறுமைகாத்து, அமைதி வழி அரசியலிலேயே கால்பதித்து நின்றது. இந்த நிலையில் கண்டிக்கப் படவேண்டிய சிங்கள அரசைத் தப்பிக்கவிட்டு, சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைத்த புலிகள் இயக்கத்துக் கெதிராக நடவடிக்கை எடுத்த ஐரோப்பிய யூனியனின் நிலைப்பாடு அநீதியானது - ஒரு பக்கச் சார்பானது என்பதே தமிழ் மக்களின் குற்றச்சாட்டாகும்.

புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுதல் என்ற போர்வையில் சிங்கள அரசு சூழ்ச்சிகரமான சதி அரசியலையே நடத்தி வருகிறது. தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கக்கூடாது என்பதில் பிடிவாதமாக இருப்பதுடன், சர்வதேச நாடுகளிடமிருந்து கிடைக்கும் மனிதாபிமான உதவிகளையும் தடுப்பதிலேயே சிங்கள அரசு குறியாகவுள்ளது. இது ஐரோப்பிய யூனியனுக்கு நன்கு தெரியும்.

சிங்கள அரசின் கடும் போக்கிற்கு எதிராக சர்வதேச சமூகத்தை மதிக்காத, அதன் ஆணவப் போக்குக்கு எதிராக சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்று, தமிழ் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் புலிகள் இயக்கத்திற்கெதிராக நடவடிக்கை எடுத்து தமிழ் மக்களைக் கண்டித்துள்ள ஐரோப்பிய யூனியனின் செயற்பாடு தமிழ் மக்களை விரக்திக்குள்ளாக்கியுள்ளது.

போர் ஓய்வு என்ற இராணுவ அம்சத்தைத் தவிர, போர்நிறுத்த உடன்பாட்டிலுள்ள அனைத்து அரசியல் அம்சங்களையும் சிங்கள அரசு ஒவ்வொன்றாகக் கைவிட்டு அந்த வரலாற்று உடன்பாட்டை வெற்றுக் காகிதமாக மாற்றியுள்ளமை ஐரோப்பிய யூனியனுக்கும் நன்கு தெரியும். ஒப்பந்த விதிகளுக்கு முரணாக புலிகளுக்கெதிரான தமிழ்க் குழுக்களை ஆயுத மயப்படுத்தி சிங்கள புலனாய்வுப் பிரிவின் வழிகாட்டலில் புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்தைச் சிங்கள அரசு நிகழ்த்தி வருவது அனைவரும் அறிந்த உண்மை.

சிங்கள அரசின் இந்த நிழல் யுத்த முனைப்புக்கு புலிகள் இயக்கத்தின் பல அரசியல் போராளிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கொலையின் பின்னணியில் புலிகள் இயக்கத்திற்கெதிராக ஐரோப்பிய யூனியன் நடவடிக்கை எடுத்திருப்பதை, அரசியல் வலுவற்ற பக்கச் சார்பான செயற்பாடாகவே புலிகள் இயக்கம் நோக்குகின்றது.

அமைச்சர் கதிர்காமரின் கொலைக்கும் புலிகள் இயக்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்று புலிகள் இயக்கம் பல தடவைகள் தெரிவித்துள்ளது. கதிர்காமரின் கொலைக்கான பழியை புலிகள் மீது சுமத்தும் சிங்கள அரசின் பின்னால் ஒரு அரசியல் நோக்கம் உண்டு. சர்வதேச ரீதியில் நற்பெயரை ஈட்டிவரும் புலிகள் இயக்கத்தை மாசுபடுத்தி தனிமைப்படுத்தும் நோக்குடனேயே கதிர்காமரின் கொலையைச் சிங்கள அரசு ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றது.

கதிர்காமரின் கொலையுடன் புலிகள் இயக்கத்தை சம்பந்தப்படுத்த சிங்கள அரசிடம் எந்த ஆதாரமும் இல்லை. வெறும் குற்றச்சாட்டுக்களை சட்டபூர்வ ஆதாரங்களாகக் கொண்டு புலிகளுக்கெதிராக நடவடிக்கையெடுக்க ஐரோப்பிய யூனியன் தீர்மானித்தது எவ்வாறு என்பது புதிராகவே உள்ளது.

தமிழருக்கு உரிமை வழங்கக் கூடாது, புலிகளுடன் பேசக்கூடாது, போர் மூலம் புலிகளை ஒடுக்கவேண்டும் என இனவெறிக் கோஷங்கள் சிங்களத்து அரசியலில் முனைப்புப் பெற்று வருகின்றன. இந்த நிலையில், ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கை போர் வெறியர்களைக் குஷிப்படுத்தியுள்ளது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவ அணுகுமுறை மூலம் தீர்வு தேடவேண்டும் என்ற பேரினவாத அரசியல் நிலைப்பாட்டை ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கை பலப்படுத்தியுள்ளது.

சிங்கள அரசு போர்நிறுத்த உடன்பாட்டைச் செயற்படுத்தவில்லை. சுனாமி பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தவில்லை. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை ஏற்றுக்கொள்ளவில்லை. நியாயமானதொரு அரசியல் தீர்வுத்திட்டத்தையும் முன்வைக்கவில்லை.

எனினும், இதற்குப் பதிலடியாக அமைதிவழி அரசியலை நிராகரித்து புலிகள் இயக்கம் போருக்குச் செல்லவில்லை. நோர்வே அரசின் மத்தியஸ்தத்தை மதித்து, சர்வதேச சமூகத்தின் சமாதான விருப்பிற்கு இசைவாகவே புலிகள் இயக்கம் நடந்து வருகிறது.

இருந்தபோதும், தமிழ் மக்களை விரக்தி கொள்ளச் செய்வதாக ஐரோப்பிய யூனியன் நடந்துகொள்வது வருத்தமளிப்பதாகவுள்ளது. கடந்த மூன்றரை வருட சமாதான அரசியலில் புலிகள் காட்டிய ஈடுபாடு விழலுக்கு இறைத்த நீர்போல் வீணாகி விட்டதோ என்ற நியாயமான ஐயமும் தமிழ் மக்களுக்கு எழுந்துள்ளது.

அத்துடன், மேற்கு நாடுகளின் மத்தியஸ்தப் பணியும் தமிழ் மக்களால் கேள்விக்குள்ளாக்கப்படும் அவலமும் தோன்ற இடமுண்டு.

எனவே, புலிகளுக்கெதிராக ஐரோப்பிய யூனியன் விதித்துள்ள பயணத்தடையை உடனடியாக விலக்கிக்கொண்டு சமாதான முயற்சிகளில் சிங்கள அரசை செயல் முனைப்புடன் ஈடுபடுத்த, அதற்கு அழுத்தங்கள் கொடுக்கவேண்டும் என்றும் ஐரோப்பிய யூனியனுக்குப் புலிகள் இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கன் DV 2007 லொத்தர் விசாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன



DV 2006 இற்கான எமது நிறுவனம் மூலம் விண்ணப்பத்திவர்களில் பலருக்கு விசா கிடைத்துள்ளதை மிகவும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

அதேவேளை DV 2007 இற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 2"x2" கலர் படம் ஒன்றுடன் எமது நிறுவனங்களுக்கு உடன் சமூகம் தரவும்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993



தீபாவளியை முன்னிட்டு விசேட விற்பனை

நவீனமுறையில் கண்களைப் பரிசோதித்து சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும். பொருத்திக்கொள்ளவும். உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக்கணேஷ்

இல.91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

இல.564,566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இல.80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

கலாலயா பயிற்சியகம்

20 வருடகால ஈடிணையற்ற பயிற்சி நிலையம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்

கேக் ஐசிங் : 22 வகையான கேக் அமைப்புகளில் சகலவிதமான ஐசிங் முறைகள், மாச்சீனி மலர்கள் (Sugar Crafting) செய்தல்.
கூந்தல் அலங்காரம் : 20 வகையான கொண்டைகள் (Hair Styles) போடுதல்.
உணவு தயாரித்தல் : மேலைத்தேச, கீழைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்.
Fabric Painting : துணிகளில், சாடியில் வர்ணந் தீட்டுதல்.
பூவேலை : கடதாசியிலும், துணியிலும் மலர்கள், மலர்ச்செண்டு தயாரித்தல்.
கைவேலை.: கடதாசி, துணி மற்றும் முத்துகளில் வேலைப்பாடுகள் செய்தல்.

அடிப்படை முக அழகுக்கலை (Basic Facial), மணமகள் அலங்காரங்கள் வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல் என்பன 2 நாட்கள் நடைபெறும்.

துரித 6 மாதகால தையல் பயிற்சிகள்
(சிறுவர், மகளிருக்கான உடைகள் தயாரிப்பதற்கு பயிற்றுவிக்கப்படும்)

அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 23.10.2005
கிழமைநாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 24.10.2005

மேலதிக விபரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

[C/4730] பதிவாளர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# பண்ணைப்பால புனரமைப்பு ஆரம்பம்; பயணிகள் போக்குவரத்து பெரும் சிரமம்!



யாழ்ப்பாணம்

பண்ணைப்பாலம் திருத்த வேலைகள் நேற்று காலை ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இதன் காரணமாக தீவுப்பகுதி மக்கள் பெரும் சிரமத்துடனேயே பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.நகரில் இருந்து தீவகம் நோக்கிச் செல்லும் பயணிகள் பண்ணைச் சந்திப் பகுதியில் இறங்கி சுமார் 150 மீற்றர் நடந்து சென்றே படகு மூலம் பாலத்தின் மறுகரையை சென்றடைய வேண்டும்.

அதேபோல மறுகரையிலும் சுமார் 200 மீற்றர் தூரம் நடந்து வந்தே தங்கள் பயணங்களைத் தொடரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பயணிகளின் சேவைக்கென ஆறு படகுகள் மட்டுமே நேற்றைய தினம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டபோதும் காலை முதல் நீண்ட நேரம் வரையில் காத்திருந்தே மக்கள் தமது பயணங்களைத் தொடர்ந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இதேவேளை,தீவகத்தில் இருந்து வரும் பயணிகள் கொளுத்தும் வெயிலில் நீண்ட வரிசையில் காத்திருப்பதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். குடிநீர் வசதிகள் எதுவும் இரு கரைகளிலும் செய்யப்படாமையால் பொதுமக்கள் மேலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பயணிகள் சேவையில் ஈடுபடும் படகுகளில் ஏற்றப்படும் ஒரு மோட்டார் சைக்கிளுக்கு ரூ50, சைக்கிளுக்கு ரூ20, பொதிகளுக்கு ரூ10 மாக கடற்றொழிலாளர் சமாசத்தினரால் அறவிடப்படுகின்றது. இதேவேளை பயணிகள் சேவையில் ஈடுபடும் படகொன்றுக்கு நாளொன்றிற்கு 4000ரூபா கட்டணமாக சமாசத்தினரால் வழங்கப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுமுறைதினமான நேற்றே மக்களைக் கட்டுப்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டதாகவும், தொடர்ந்து வரும் வேலை நாட்களில் பயணிகள் தொகைஅதிகரிக்கும் நிலை ஏற்படுமாகையினால் மேலும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிஏற்படும் எனவும் பயணிகளை ஒழுங்குபடுத்தும் சேவையில் ஈடுபடும் பணியாளர்கள் தெரிவித்தனர். (113)

## கதிர்காமரை...

அதில் இலக்கைக் குறித்துக்கொள்ளும் சிவப்புப் புள்ளியும்உள்ளது. இந்தத் துப்பாக்கியில் 30 ரவைகளைக் கொண்ட மகசினைப் பயன்படுத்த முடியும். அதில் இருந்தவை 1983 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ரவைகளாகும்.

இது உண்மையான சினைப்பர் அல்ல. தன்னியக்க துப்பாக்கியே இது. தொலைநோக்கியொன்றைப் பொருத்தி இது சினைப்பர் துப்பாக்கியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

லக்ஷ்மன் கதிர்காமர் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதமும் சைலன்சர் பொருத்தப்பட்ட ஜேர்மன் தயாரிப்பு தன்னியக்க துப்பாக்கியே என அரச இரசாயன பகுப்பாய்வுத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட இடத்திலிருந்து வெற்று ரவைகளை பொலிஸார் கண்டுபிடித்திருந்தனர். அவற்றுக்கமைய அந்தக் கொலைக்கென பயன்படுத்தப்பட்டவை 83 ஆம் ஆண்டுத் தயாரிப்பான ரவைகளே எனத் தெரியவந்திருந்தது.

இந்த ரவைகளும் மாரவில மகாவெவவில் கண்டுபிடிக்கப்பட்ட ரவைகளும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போவதாக விசேட அதிரடிப்படையினரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மாகவெவவில் கண்டுபிடிக்கப்பட்ட சினைப்பருடன் அதற்குப் பயன்படுத்தப்படும் 3 மகசின்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த மகசின்களில் 83 தோட்டாக்கள் இருந்தன. இங்கு கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் இரண்டு மகசின்களில் தலா 30 ரவைகள் வீதமும் மற்றதில் 23 ரவைகளும் இருந்தன.

கதிர்காமரைக் கொலை செய்த கொலையாளி அவரை இலக்கு வைத்து 7 முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. மகாவெவவில் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் மகசினுள் 7 ரவைகள் இருந்துள்ளன.

கதிர்காமரைப் படு கொலைசெய்வதற்காக துப்பாக்கியைக் கொண்டு வந்த கொலையாளி அதனை ஒரு ரெஜிபோம் பெட்டியில் வைத்தே கொண்டுவந்திருந்தார். தாக்குதல் முடிந்து கொலையாளி தப்பிச்சென்ற வேளை அதனைக்கொண்டு செல்லவில்லை. அந்தப் பெட்டியில் துப்பாக்கியின் அடையாளம் இருந்தது. மகாவெவவில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கியுடன் அந்த அடையாளம் பொருந்துவதாக விசேட அதிரடிப்படையின் ஆயுத நிபுணர்கள் தெரிவித்தனர்.

இதற்கமைய கதிர்காமரின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் இதுவாக இருக்கலாமென விசேட அதிரடிப்படையினர் நம்புகின்றனர். அரச இரசாயனப்பகுப்பாய்விற்கு அனுப்புவதன் மூலம் இதன் உண்மை நிலையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என நிமால் லெகே மேலும் தெரிவித்தார்.

கதிர்காமரின் படுகொலையை அடுத்து அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது கைவிடப்பட்டிருந்த காணியொன்றிலிருந்து சில ஆயுதங்கள் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டன.

மகாவெவவில் கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய ஆயுதங்களும் இவற்றுடன் ஒத்துப்போவதாகவும் விசேட அதிரடிப்படைத் தகவல்கள் தெரிவித்தன.

## அதிகரிக்கும்...

பாடசாலை அதிபர்கள் உட்பட அதிகரித்துவரும் அரசியல் கொலைகளை சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரும் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

அதேவேளை ஐந்தாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் நடைபெற இருக்கின்ற வேளையில் நாடளாவிய ரீதியில் அதிகரித்துவரும் வன்செயல்கள் கவலை தருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆயுதபாணிகள்...

அவர்கள் பின்னர் தப்பிச்சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

இதேவேளை, நேற்றுக்காலை 6 மணி முதல் நண்பகல்வரை சித்தாண்டிப் பகுதியை சுற்றிவளைத்து படையினரும் பொலிஸாரும் தேடுதல் நடத்தியதில் எவரும் கைதுசெய்யப் படவில்லை.

## போர்நிறுத்த...

ஒருவர் பலியான சம்பவம், யாழ்ப்பாணத்தில் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் கல்வியியலாளர்கள் கொலை செய்யப்பட்டசம்பவங்களைத் தொடர்ந்து இந்தக் கடிதம் அனுப்பப்படுகிறது.

வவுணதீவு தாக்குதலுக்குப்பின் அரச ஊடகங்கள் கேணல் பானு கொல்லப்பட்டதாக உடனடியாக பாரியளவில் பரப்புரை செய்தன. இராணுவத்தின் பெரும் சதித்திட்டமும், தொடர்பும் இத்தாக்குதலில் இருப்பதை இது நேரடியாக சுட்டிக்காட்டுகிறது.

போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாகப் பாதுகாக்க நாம் எவ்வாறு கடுமையாக பாடுபட்டாலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தையும், சமாதானநடவடிக்கைகளையும் சீர்குலைக்கும் நோக்குடன் நிலைமைகளை அரசு கையாளுகின்றது என்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன.

இது போன்ற செயற்பாடுகளால் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டதன் நோக்கம் பாழடிக்கப்படும்.

இராணுவ ஆக்கிரமிபுப் பகுதிகளில் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்கும் முழுப்பொறுப்பும் அரசுக்குத்தான் உண்டு; போர்நிறுத்தஉடன்படிக்கையை இராணுவம் சிதைத்து வருகிறது என்பதை அரசுக்கு உணர்த்துவதற்கு கண்காணிப்புக் குழு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களை பாதிக்கும் இத்தகைய வன்முறைகள் அதிகரித்து வருவது எமக்கு கவலை அளிக்கிறது என்று இந்தக் கடிதத்தில் சு.ப. தமிழ்ச்செல்வன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## உழவு இயந்திரம்...

கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடி வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் மீது மோதியது.

இதனால் குடும்பஸ்தர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார். இதேவேளை, உழவு இயந்திரத்திலிருந்த இளைஞர்கள் பதற்றத்துடன் அதிலிருந்து குதித்து ஓடிவிட்டனர்.

தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்த உழவுஇயந்திரம் மீண்டும் முன்புறமாக ஏற்கனவே காயப்பட்டிருந்தவர் மீது மோதியது. இதனால் அவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

பருத்தித்துறை பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். மரணவிசாரணைகளின் பின்னர் சடலம் நேற்று மாலை 5 மணியளவில் உறவினரிடம் ஒப்படைக்கப் பட்டது.

இந்தச் சம்பவத்தில் உழவுஇயந்திரத்தைச் செலுத்திவந்த சாரதிகளான செபரத்தினம் ராஜ், பு.ரவிக்குமார், கனெட்கிறிஸ்டி ஜெராட் ஆகியோரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைதுசெய்தனர். (14)

## அவசரகால....

டின் பாதுகாப்பு நிலவரம் குறித்த அறிக்கையை ஜனாதிபதி சந்திரிகா கேட்டிருந்தார்.

அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததால் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க சந்திரிகா ஒப்புதல் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

## பயங்கரமான போர் வெடிக்கும்...

கொழும்பில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும் மற்றும் தென்பகுதியிலும் இடம்பெற்று வரும் கொலைகள் இந்த நாட்டுக்கு பெரும் ஆபத்தானதாகும். ஆனால், வெளிநாடுகளைச் சேர்ந்த சமாதானப் படையினரோ அல்லது தனி ஒரு நாட்டின் சமாதானப் படையோ இங்கு நிறுத்தப்படுவதை நான் எதிர்க்கிறேன். ஏனெனில், இந்தப் படையினரை நிறுத்துவதை போர் நிறுத்த உடன்படிக்கையின்படி இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், சமாதான முயற்சியில் வெளிநாட்டு சமாதானப் படையினர் தலையிட வேண்டும்.

முரண்பாட்டுப் பிரதேசங்களில் ஐ.நா. பாதுகாப்புச் சபை பன்னாட்டுப் படையினரையோ அல்லது தனி ஒரு நாட்டுப் படையையோ அனுப்பியிருந்தாலும் இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அனுசரணையாளர்களான நோர்வேயை விட வேறெந்த வெளிநாடும் பெரிதாக அக்கறை காட்டவில்லை.

இரண்டு தரப்பினருமே போர்ச் சூழலை ஏற்படுத்தி வருகின்றனர். தற்போதும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது எவ்வாறெனில் வேறுபட்ட இலக்குகளாக நடந்து வருகிறது. மறைமுகமான போரோ அல்லது பேரழிவான போரோ எவ்வித சம்பவமென்றாலும் இது போர்நிறுத்த உடன்படிக்கையின் 1.2 சரத்தின்படி வன்செயலாகும். எனவே, போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது போரை ஏற்படுத்தும் அபாயகரமான காரணிகள் பல உள்ளன. இதில் முக்கியமானது கருணா குழுவாகும். யுத்தம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. யுத்தம் அபாயகரமானது என்பதனாலேயே நோர்வே அனுசரணையாளராகிய நாம் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் காப்பாற்றும் முயற்சியில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

சமாதானத்தை ஏற்படுத்த இரண்டு தரப்பும் உண்மையாகவே விரும்புகின்றது. இதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஒருவருக்கொருவர் சகிப்புத் தன்மை, பாரபட்சமில்லாத கொள்கை, சமத்துவத்தை நிலை நாட்டுதல், இறுதியில் சமாதானத்தை அடைதல் என்றவாறு இருக்க வேண்டும்.

சமாதான வழிமுறைகளைக் கண்டறிந்து அவற்றை முன்னெடுப்பது இரண்டு தரப்பிடையேயும் தான் தங்கியுள்ளது. எம்மால் அனுசரணைப் பணியை மட்டுமே வழங்க முடியும்.

இலங்கையிலுள்ள சகலரும் மற்றும் உள்ளூர், வெளியூர் ஊடகங்களும் பொறுமையைக் கடைப்பிடிப்பதுடன், சமாதான முயற்சி தொடர்பான பொது நிலைப்பாட்டுக்கு வருவதற்கு இரண்டு தரப்பினரையும் ஊக்கப்படுத்தும் வகையிலான சாதகமான தோற்றப்பாட்டை ஏற்படுத்த வேண்டும்.

சமாதான முயற்சிகளால் இந்த நாட்டில் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. ஈராக்கில் உள்ளது போன்ற நிலைமையே இங்கும் உள்ளதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தற்போது நாம் குற்றச் செயல்களை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. இது போருக்கான செயற்பாடுகளாகவே உள்ளன. எதிர்காலத்தில் அமைதிப் பேச்சுக்கள் நடைபெறுமா என்பதை என்னால் கூறமுடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்



### திருமதி மேரி றெஜீனா இம்மனுவேல்

*(இளைப்பாறிய ஆசிரியை - சில்லாலை)*

சில்லாலை பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட, மேரி றெஜீனா இம்மனுவேல் அவர்கள் 15.10.2005 நேற்று காலமானார்.

அன்னார், அந்திரேஸ்பிள்ளை யோசப் இம்மனுவேலின் அருமை மனைவியும், யோசி தயானி கிங்சிலி, காலஞ்சென்ற ஜோதயான் இம்மனுவேல் மற்றும் அன்ரனீற்ரா தர்ஷினி - டெஸ்மன்ட், மரியெற்தர்மினி இம்மனுவேல் ஆகியோரின் அன்புத்தாயாரும், கிங்சிலி மரியநாயகம், அல்பிறைற் டெஸ்மன்ட் நோயல் இம்மனுவேல் ஆகியோரின் மாமியாரும், ஜோயிலின், ஜோயலா, யோகான் பற்றிக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், மேரி மாகிறெட் ஏபிரகாம், காலஞ்சென்ற டோமினிக்கா வேதநாயகம், டொமெற்றில்டா யோனாஸ், பிரான்சிஸ் சேவியர் வில்சன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அருட்பணி A.C.கிறிஸ்ரோப்பர்
(மைத்துனர்)

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

தீபாவளியை முன்னிட்டு
விசேட விலைக்கழிவில் பெருந்தொகையான,
சிங்கப்பூர், மலேசியா, இந்திய டிசைன்களில்
புதிய வாழ்த்துமடல்கள்
சீவம் இன்டஸ்ரீசின்
நேரடி யாழ்ப்பாண முகவர்கள்
100 போஸ்காட், வாழ்த்து மடல்கள் ரூபா 50 மட்டுமே!
[illegible]மிலன் புத்தகசாலை, 5, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். T.P .. 222 2422
ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C/4726)

நீங்கள் கணினி வாங்கப் போகிறீர்களா?
UNIT
10ஆம் பக்கம் பார்க்க

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.